விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 05 சனிக்கிழமை (19.06.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 182

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO


## வெளிநாடுகளின் தலையீடு தேவையில்லை

# எமது உள்நாட்டு பிரச்சினையை நாமே தீர்த்துக் கொள்வோம்

## வெற்றி விழாவில் ஜனாதிபதி விசேட உரை

(கொழும்பு)

நாட்டின் இறைமையையும் மக்களையும் பாதுகாப்பதற்காக போராடிய வீர மைந்தர்கள், எமது இராணுவ வீரர்கள். அவர்கள் யுத்தக் குற்றம் செய்ததாகக் கூறியதை விட மிகப் பெரிய காட்டிக்கொடுப்பு எதுவும் இல்லை. இதுதான் பாரிய தேசத்துரோகம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (02 ஆம் பக்கம் பார்க்க)



## குற்ற விசாரணை நடத்துவதற்கு ஐ.நா. நிபுணர் குழு தேவையில்லை

### அமைச்சர் ஹெகலிய வலியுறுத்து

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை இலங்கை விவகாரம் தொடர்பில் ஆராயும் நிபுணர் குழு ஒன்றை நியமிக்க அவசியம் இல்லை என ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

உள் நாட்டுப் போர் விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ள நல்லிணக்க மறுசீரமைப்புக் குழு போதுமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையால் இலங்கை விவகாரம் தொடர்பில் ஆராயும் நிபுணர் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதை இலங்கை அரசு உறுதியாக எதிர்ப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகாரச் செயலாளர் (16 ஆம் பக்கம் பார்க்க)

## 13-வது திருத்தச் சட்ட மூலத்திலுள்ள சிக்கலை நீக்க நிபுணர் குழு தேவை

### வரதராஜப்பெருமாள் ஆலோசனை

(கொழும்பு)

அரசமைப்பின் 13-வது திருத்தச் சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் சிக்கல்கள் குறித்து ஆராய்வதற்கு நிபுணர்கள் குழுவொன்றை அரசு நியமிக்க வேண்டும் என வடக்குக் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் கோரியுள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் முன்னாள் தலைவர் பத்மநாபாவின் 20-வது நினைவு நிகழ்வில் கலந்து கொள்ளும் நோக்கில் இலங்கை வந்துள்ள வரதராஜப் பெருமாள், அரசமைப்பின் 13-வது திருத்தத்தின் அமுலாக்கம் குறித்துப் பேசியபோதே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

## சீனாவின் 25 ஆயிரம் கைதிகள் இலங்கையில் ஈழத் தமிழர்களுக்குப் பேராபத்து-ஜெயலலிதா

(சென்னை)

சிறைக்கைதிகளாக இருந்த 25,000 தொழிலாளர்கள் சீனாவிலிருந்து இலங்கைக்கு வந்தமை இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு ஆபத்தாக அமையும் என்று அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் நெடுஞ்சாலைப் பணிகளையும் ரயில்வே பணிகளையும் மேற்கொள்வதற்காக சிறைக்கைதிகளாக இருந்த 25,000 தொழிலாளர்கள் சீனாவிலிருந்து இலங்கையில் வந்து இறங்கி உள்ளதாக ஊடகங்களில் வெளிவந்துள்ள செய்தி அதிர்ச்சி அளிக்கிறது.

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மறுசீரமைப்பதற்காக இந்திய அரசாங்கம் 1, 000 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. ஆனால் இந்த மறுசீரமைப்பதற்கான ஒப்பந்தத்தை சீனாவிடம் இலங்கை அரசு அளித்திருக்கிறது.

இதிலிருந்து இலங்கையில் உள்ள தமிழர்களின் (02 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு எதிராக ஆஸி.செனற்றில் பிரேரணை

(சிட்னி)

இலங்கையின் யுத்தக் குற்றங்களுக்கு எதிராக அவுஸ்திரேலிய செனட் சபையில் எதிர்வரும் 21 ஆம் திகதி பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஆஸியின் கிறீன் கட்சியைச் சேர்ந்த செனட்டர் சரா ஹன்சன் யங் இப் பிரேரணையை அங்கு சமர்ப்பித்து உரையாற்றவுள்ளார்.

இலங்கையின் யுத்தக் குற்றங்களுக்கு ஆதாரங்களை அவர் செனட் சபைக்குச் சமர்ப்பித்து இலங் (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பெரு நிலப்பரப்பில் றப்பர் செய்கைக்கு முஸ்தீபு!

(கொழும்பு)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களையும் பெருந்தோட்ட மயமாக்கப்பட்ட மாவட்டங்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதன் கீழ் அந்த மாவட்டங்களில் றப்பர் மற்றும் தென்னைப் பயிர்ச் செய்கையைப் பாரியளவில் மேற்கொள்ளவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காக இலங்கை றப்பர் ஆராய்ச்சி திணைக்களத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த வாரம் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பெரும்பாலும் அரசாங்கத்தின் வசம் இருக்கும் வகையில் பாரிய றப்பர் பயிர்ச் செய்கையை முன்னெடுக்கவுள்ள அதேவேளை அங்கு தனியார் றப்பர் பயிர்ச் செய்கைத் தோட்டயாக்கங்களுக்கும் அனுமதி வழங்கப்பட (16 ஆம் பக்கம் பார்க்க)

## யப்பானின் விசேட தூதுவருடன் த.தே.கூட்டமைப்புச் சந்திப்பு

(கொழும்பு)

யப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாசிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையிலான பேச்சுவார்த்தை நேற்றிரவு இடம்பெற்றதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இச் சந்திப்புக் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, இச் சந்திப்பின் போது தமிழ் மக்களின் மீள்குடியேற்றம், மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தடுப்பு முகாம்களில் உள்ளவர்களின் முழுமையான விபரத்தை வெளியிட அரசை வலியுறுத்துதல் போன்றவை சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டது.

மேலும் யப்பானிய அரசின் நிதி முழுமையாக மக்களைச் சென்றடைய வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் ஓர் அரசியல் தீர்வு எட்டப்பட யப்பானிய அரசு இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் (16 ஆம் பக்கம் பார்க்க)

# எமது உள்நாட்டு பிரச்சினையை...

இராணுவ வெற்றியை கொண்டாடும் முகமாக கொழும்பு காலிமுகத்திடலில் விசேட நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

நிகழ்வுகளில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஜனாதிபதி காலை 8.28 மணிக்கு அங்கு வருகை தந்தார். அவரை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் முப்படைத்தளபதிகள் வரவேற்றனர்.

அதன் பின்னர் 8.30 மணிக்கு தேசிய கொடியேற்று நிகழ்வைத் தொடர்ந்து இராணுவ அணிவகுப்பு இடம் பெற்றது.

அதனையடுத்து உரையாற்றிய போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

சற்று முன்னர் நான் தேசிய கொடி ஏற்றிவைக்கும் போது ஒரு வருடத்திற்கு முன்னர் உயிரிழந்த இராணுவ வீரர்களின் இறுதி மூச்சை உணர்ந்தேன்.

எமது நாட்டை இரண்டாக பிளவுபடுத்த விடுதலைப் புலிகள் மட்டும் முயற்சி செய்யவில்லை. நாடாளுமன்றத்திலும் அதற்கான முயற்சி நடந்தது.

எந்தவொரு காரணத்திற்காகவும் எப்போதும் எமது தாய் நாட்டை பிளவுபடுத்த இனிமேல் நான் இடமளிக்கமாட்டேன். வீரம் என்பது எமது பாரம்பரியத்தில் ஊறிவிட்ட ஒன்று. அதனை பிறதேசங்களில் இருந்து இறக்குமதி செய்யத் தேவையில்லை.

தாய்நாட்டிற்காகவும் அதன் இறைமைக்காகவும் மக்களுக்காகவும் போராடிய வீரமைந்தர்கள் எமது இராணுவ வீரர்கள். அவர்களைக் காட்டிக் கொடுப்பதை போன்ற மாபெரும் தேசத்துரோகம் வேறு எதுவும் இல்லை.

இரண்டு இலட்சம் படைவீரர்கள் கடந்த 4 வருடங்களாக ஊணின்றி உறக்கம் இன்றி செய்த தியாகத்தின் காரணமாகவே நாம் கொடிய பயங்கரவாதத்தை தோற்கடித்து உலக அரங்கில் நிமிர்ந்து நிற்கிறோம்.

இதேபோன்றதொரு தியாகத்தை எமது அரசாங்க ஊழியர்களும் செய்வார்கள் ஆனால் ஆசியாவிலேயே ஆச்சரிய நாடாக எமது இலங்கையை மாற்றியமைக்க முடியும்.

எமது உள்நாட்டுப் பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்வோம். இதில் வெளிநாட்டவர்கள் தலையிட நாம் அனுமதியோம்.

பயங்கரவாதத்தின கொடூரத்தை அனுபவித்த நாடுகளில் இலங்கையர்களின் பங்கு துயரம் மிக்கது. பயங்கரவாதத்திற்கு எந்த நாடுகள் துணை போகின்றனவோ அந்த நாடுகளே பயங்கரவாதத்தால் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றன.

படையினரின் உயிர் தியாகங்கள் மூலம் பயங்கரவாதத்திற்கு எதிராக நாம் அடைந்த வெற்றியின் பிரதிபலன்களை வடபகுதி மக்கள் அடைந்து மகிழ்ச்சி அடைய வேண்டும். அதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடு பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இவ் வருட இறுதிக்குள் யுத்தத்தால் சிதைவடைந்த வடபகுதி முழுவதும் வழமைக்கு திரும்பிவிடும் என எதிர்பார்க்கிறேன்.

கடந்த 30 வருட காலப் போராட்டத்தின் காரணமாக நாம் நாட்டை பிரிவினையிலிருந்து விடுவித்துள்ளோம். இனியும் இந்த நாட்டை பிளவுபடுத்த எவருக்கும் இடமளியோம்.

எமதுநாட்டுமக்கள்யுத்தம்காரணமாக இழந்த அனைத்தையும் மீண்டும் பெற்றுக் கொள்ள மகிந்த சிந்தனை மூலம் வழியேற்படுத்தியுள்ளோம்.

நாட்டிலுள்ள சகல இன மக்களையும் ஐக்கியப் படுத்தும் நோக்குடனேயே இந்த தேசிய விழா கொண்டாடப்படுகின்றது. வெளிநாடுகளின் நிர்ப்பந்தங்களுக்கு அடிபணிந்து எமது சுதந்திரங்களை பறிகொடுத்து உதவிகளைப்பெற நாம் தயார் இல்லை.

நாட்டுக்காக நாம் இரத்தமும் கண்ணீரும் சிந்துவதை தவிர்க்க முடியாது. இவ்வாறான தியாகங்கள் மூலம் இந்த நாட்டில் அண்மைக்காலத்தில் வீரதீர சரித்திரம் படைத்தவர்கள் எமது படையினர். அவர்கள் மரணித்த பின்னர் ஏனையவர்களைபோல்சமாதிகளில்உறங்கமாட்டார்கள். இந்த நாட்டின் மக்களின் இதயங்களில் வாழ்வார்கள்.

இறுதிக் கட்ட யுத்தம் நடைபெறும் போது வெள்ளைக் கொடி ஏந்தி வந்தவர்களை கொலை செய்ததாக எமது வீரர்கள் காட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். அது எந்த வகையில் உண்மை என்பது யாவருக்கும் தெரியும்.

ஒரு கையில் துப்பாக்கி, மறுகையில் மனிதாபிமானம் என யுத்தத்தை நடத்திய எமது வீரர்களை எவ்வாறு காட்டிக்கொடுக்க முடியும்?

எந்தவொரு சாதாரண பிரஜையையும் தனது துப்பாக்கியால் கொலை செய்யாதவர்கள் எமது இராணுவ வீரர்கள். நான் அனைத்து மக்களையும் சமமாகவே பார்க்கிறேன் எனத் தெரிவித்தார். (ச-5)

# சீனாவின் 25 ஆயிரம் கைதி...

நலனுக்காக அனுப்பப்பட்ட இந்திய மக்களின் வரிப்பணம் சீனாவிற்கு சென்றடைகிறது என்பது தெளிவாகிறது இதுவே தற்போது எனது முக்கிய கவலை.

இதுவரை பாதுகாப்பாக உள்ள இந்தியாவின் தெற்குப் பகுதியில் இந்தியாவிற்கு எதிரான வேவுபார்க்கும் பணிகளை தொடங்கும் குறிப்பிட்ட நோக்கத்துடன் சீன ஒற்றர்களும் உளவுத் துறையினரும் சீனத் தொழிலாளர்களுடன் இலங்கைக்குள் ஊடுருவி இருப்ப தாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது.

தமிழ் நாட்டின் தெற்கு கடலோரத்திலிருந்து சுமார் 20 கிலோ மீற்றர் தொலைவில் தான் இலங்கை உள்ளது. 1962 ஆம் ஆண்டு சீன ஆக்கிரமிப்பு இந்திய தேசத்தையே உலுக்கியது. அப்போதிருந்த இந்திய அரசு சகோதரத்துவத்து மனப் பான்மையுடன் சீனாவோடு அபரிமிதமாக உறவாடிக் கொண்டிருந்த போது கூட சீனா, இந்தியாவின் மீது தாக்குதல் தொடுத்தது.

நாம் எச்சரிக்கையுடன் இல்லாவிட்டால் அதே வரலாறு மீண்டும் நிகழ்வதற்கு வாய்ப்பிருக்கிறது. வட இலங்கையில் சீனர்கள் பெருமளவில் குவிந்திருக்கிறார்கள் என்ற ஊடகங்களின் தகவல் உண்மையாக இருக்கு மேயானால் இந்தியாவிற்கு ஆபத்து எதிர் நோக்கியிருக்கிறது என்பதில் எவ்விதமான ஐயமும் இல்லை.

அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு வருகை தந்திருந்த போது பயனற்ற சம்பிரதாய ரீதியான பேச்சுக்களை அவருடன் பகிர்ந்து கொள்வதை தவிர்த்து இந்த பிரச்சினையை இந்தியா உறுதியுடன் முன் வைத்திருக்க வேண்டும்.

வட இலங்கையில் சீனர்கள் குவிக்கப்பட்டுள்ளதன் மூலம் மற்றுமொரு கடுமையான ஆபத்து ஏற்கனவே மிக மோசமாக உருக் குலைந்துள்ள இலங்கைத் தமிழர்களுக்கு காத்திருக்கிறது.

27 ஆண்டு கால இனப்போர் பல உயிர்களை பலிவாங்கியுள்ளது. பெரும்பாலான ஆண்கள் இந்த இனப்போரில் உயிரிழந்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இன்னமும் பாதுகாப்பு முகாம்களில் அடைக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில் தற்காத்துக் கொள்ளும் சக்தியற்று பலவீனமாக உள்ள முதியவர்கள் ஊனமுற்றோர் மற்றும் பெண்கள் அடங்கிய மீதமுள்ள தமிழர்களை சீனாவிலிருந்து வந்துள்ள 25,000 சிறைக் கைதிகள் தங்களுடைய அத்துமீறல்களுக்கு உட்படுத்த ஆரம்பத்தால் அங்குள்ள தமிழர்களின் அவல நிலைமை மேலும் விபரீதமாகும்.

இந்தப் பிரச்சினையில் காலதாமதமின்றி இந்திய அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை அரசுடன் கடுமையாகப் பேச வேண்டும். கடினமாக நடந்து கொள்ள வேண்டும் என்று ஜெயலலிதா கூறி உள்ளார். (ந-5)


## தவறிவிட்டது

திருமதி சாரதாதேவி மேரிதாஸன் ஆகிய எனது தே.அ.அட்டையும் (இல. 607040591V) கைத்தொலைபேசியும் சிறுதொகைப் பணமும் அடங்கிய கைப்பை 764 ஆம் இலக்க மினிபஸ்ஸில் யாழ் பஸ்நிலையத்திற்கும் அப்பலோ மருத்துவமனைக்குமிடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கணேசா உணவகம், இல. 19, பலாலி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவும்படி கேட்டுக்கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்

(C-443)

## வேலை ஆட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் தொலைபேசி நிலையத்திற்கு போட்டோ பிரதி, தொலை பேசி இயக்கு வதில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்பு பவர்களும் ஆண், பெண் இருபாலாரும் தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்.

0789488160,0774012707

## யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்

BCHS

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now

100% நல்ல சம்பளம்

எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு

FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT

FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)

FOUNDATION DIPLOMA IN MANAGEMENT

➤ இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளில் கற்கலாம்.

➤ உங்களுக்கான விசா உத்தரவாதத்தினை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் உறுதிசெய்வார்கள்.

கல்வித்தகமை: G.C.E. (O/L) போதுமானது

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் எம்மை தொடர்பு கொள்ளவும்

Access Programming

O/L முடித்த மாணவர்கள் அல்லது A/L லில் நல்லபெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து Higher National Diploma & Degree போன்ற கற்கை நெறிகளைக் கற்று, Bsc, BBA,MBA பட்டதாரி ஆக முடியும்.

IELTS (International English Language Testing System)

(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months

Diploma in English Advanced Diploma in English

100 % பயிற்சி

மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது

100 % வெற்றி

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.

பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.

Certificate In Personality Development / ஆளுமை விருத்திசெய்யும் பயிற்சி நெறி

ஒரு நிமிடம் சிந்தியுங்கள்!!!

► இன்று எமது பிரதேசத்தில் புதிய நிறுவனங்கள், வங்கிகள் தமது கிளைகளை திறந்தும் தகுதியானவர்களை அடையாளங் காணாத காரணத்தினால் அத்தொழில் வாய்ப்புக்கள் கைநழுவுகிறது. நீங்கள் பட்டங்களையோ, வேறு பல சான்றிதழ்களையோ வைத்திருப்பதினால் உங்களுக்கு வேலைகிடைத்துவிடுவதில்லை. எமது இப்பயிற்சி நெறியின் முக்கிய நோக்கம் எம்மவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பினை உறுதி செய்வதே. ஆகவே இன்றே எம்முடன் இணைந்து உங்களின் வேலைவாய்ப்பினை உறுதி செய்து கொள்ளுங்கள்....

► இப்பயிற்சி நெறியின் மூலம் Interview வை எவ்வாறு எதிர்கொள்வது அங்கு கேட்கும் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது, அலுவலகத்தில் பேசக்கூடிய ஆங்கிலப்பயிற்சிகள்,Computer பயிற்சிகள், HR Management, Management, etc...etc.....என பலவிடயங்களை உள்ளடக்கியது. (01 Month)

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் இருந்து பங்குபெறும் பட்டதாரிகளுக்கு சிறந்த கட்டணக் கழிவுடன் குழுக்களாக பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்படும்.

இப்பயிற்சிப் பட்டறையில் பயிலும் அனைவரும் எமது தொழில் வங்கியில் பதியப்பட்டு அதனூடாக நல்ல நிறுவனங்களில் (Bank & Private firms) வேலைவாய்பை பெற ஆவண செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)

(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)

Tel :021 2224550 HotLines: 0773501499 0777222422/ 0714299935

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

திகதி 19.06.2010, 23.06.2010, 25.06.2010 காலை : 10.00 மணி மாலை : 04.00 மணி

## விற்பனையாளர் தேவை

மின்சாரப் பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர் தேவை.

தொடர்புக்கு:

168,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021222 8345

(1724)

## விற்பனைக்கு

ஊரிக்காடு வல்வெட்டித்துறை சமரபாகு தேவன் குறிச்சியில் 2 1/2 நிலப்பரப்பு தோட்டம் செய்யும் ஆதனம் விற்பனைக்குண்டு.

விபரங்களுக்கு தொடர்பு :- 0776271436

மீசாலை பங்களா வீதியில் கண்டி வீதிக்கு அண்மையில் 5 நிலப் பரப்புக் காணி வீடுகட்டுபவர் களுக்குகந்தது. கிணறுடன் விற்பனைக்குண்டு.

விபரங்களுக்கு தொடர்பு :- 0776271436

(1717)

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் 760783609V இலக்கமுடைய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதி அனுமதிப் பத்திரம், அலுவலக அடையாள அட்டை அடங்கிய பேஸ் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து குறித்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.0776510358 0213006502

(C-473)

## காணி விற்பனைக்குண்டு

தாவடி வடக்கு வன்னியசிங்கம் வீதியில் 11/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளிற்கு:- 0214904503, 0772986261

(1727)

## கொடிகாமம் தவசிக்குளம் கண்ணகையம்மன் ஆலய 9ஆம் திருவிழா சிறப்பு இசைநிகழ்வு

யாழ் .-கொழும்பு புகழ்

பிரண்ட்ஸ் இசைக் குழுவினர் வழங்கும்

“ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்” இசை நிகழ்வுடன் நடன நிகழ்வும் (19.06.2010) இன்று சனிக்கிழமை இரவு 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

9-ம் திருவிழா உபயகாரர்கள்

(1718)

# இன்று ஒரு தகவல்

## மண்பானையின் மகத்துவம்

"அம்மா ஒரு மண்குடம் வாங்கிக் கொடுத்தார். அதை எடுத்துக் கொண்டு போய் என் மனைவியிடம் கொடுத்தேன். அவள் அதை ஒரு பொன்குடமாக மாற்றி விட்டாள்"என்றார் ஒருத்தர்.

"எப்படி?" என்று கேட்டேன்.

"ஒன்றுமில்லை. கீழே போட்டு உடைத்துவிட்டாள்" என்றார்.

"அப்படியானால் அது எப்படி பொன்குடமாகும்?" என்றேன்.

"நீங்கள் பழமொழி கேட்டதில்லையா? மாமியார் உடைத்தால் மண்குடம். மருமகள் உடைத்தால் பொன்குடம் என்று இது மருமகள் உடைத்தது. அது தான் பொன்குடம்" என்று அதற்கு விளக்கம் கொடுத்தார் அவர்.

மருமகள் உடைக்கவில்லை என்றால் கூட இந்தக் காலத்தில் மண்குடம் பொன்குடம் மாதிரித்தான்.

மண் பானையில் அவ்வளவு மகத்துவம் இருக்கிறது.

தண்ணீரை சுத்தமாக்கி குடிப்பதற்கு சிலபேர் வோட்டர் பில்டர் உபயோகப்படுத்துகிறார்கள். அதேபோல் தண்ணீர் குளிர்ச்சியாக இருக்கவேண்டும் என்பதற்காக சிலர் பிரிட்ஜ் உபயோகப்படுத்துகிறார்கள்.

இரண்டு காரியத்தையும் நமக்கு செலவே இல்லாமல் செய்து கொடுப்பது மண்பானை.

உலோகப் பாத்திரங்களில் நீரை ஊற்றி வைத்திருந்தால் அதில் கிருமிகள் அதிகமாவதற்கு வாய்ப்புண்டு.

ஆனால் மண்பானையில் நீரை ஊற்றி வைத்தால் அப்படி ஆவதில்லை.

நீரிலுள்ள கிருமிகளையெல்லாம் மண்பானை இழுத்துக் கொள்கிறது. குடிநீர் சுத்தமாகிவிடுகிறது.

அந்தக் காலத்தில் நம் முன்னோர்கள் இதை நன்றாக புரிந்து வைத்திருந்தார்கள்.

இந்தக் காலத்தில் ஆராய்ச்சி செய்து பார்த்துவிட்டு நாமும் அதைப் புரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறோம்.

மண்பானை ஒரு தலைசிறந்த வோட்டர் பில்டர் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

ஐதராபாத் உணவு ஆராய்ச்சிக்கழகம் இதைக் கண்டு பிடித்திருக்கிறது.

இதற்குப் பின்னரும் நாம் சும்மா இருக்கலாமா? உடனே கிளம்பிப் போய் ஒரு மண்பானை வாங்கிக் கொண்டு வரவேண்டியது தானே!

பானையை எடுத்துத் தட்டிப் பாருங்கள். வெங்கலப் பாத்திரத்தைத் தட்டுவது போல் சத்தம் வந்தால் அது நல்ல பானை.

பானைக்கு வெளிப்பக்கம் கருப்புத் திட்டாகத் தெரியும். பளபளப்பாகவும் இருக்கும். இப்படி இருந்தால் பானை நன்றாக வெந்திருக்கிறது என்று அர்த்தம்.

சிலபானைகள் சாம்பல் பூத்து சொர சொரப்பாக இருக்கும் அதுவேண்டாம்.

வெளிப்பக்கம் இருப்பதைப் போன்றே உள்பக்கமும் கருப்புத் திட்டாக இருந்தால் அதை வாங்க வேண்டாம். சிறிது நாட்களில் உடைந்து விடும்.

புதுப் பானையில் நீரை ஊற்றியதும் உஸ் என்று ஒரு சத்தம் வரும் உள்ளே பாம்பு இருந்து சீறுது என்று பயப்படாதீர்கள். பானையில் களிமண்ணுடன் மணல் கலந்திருக்குமல்லவா. அந்த மணல் நீரை உறிஞ்சும் சத்தம் தான் அது.

வெயில் காலத்தில் நமக்கு வியர்க்கும் அல்லவா, அதேபோல் பானைக்குள் நீரை ஊற்றியவுடன் அதன் வெளிப்பக்கம் வியர்க்கும்.

பானைக்கு வெளிப்பக்கமோ உள்பக்கமோ சீமெந்து பூசியிருந்தால் அதுவேண்டாம். அதனால் உஷ்ணக் காற்று உள்ளேயே தங்கிவிடும். தண்ணீர் குளிர்ச்சியாக இருக்காது.

கோடைகாலத்துக்கு மண்பானை நீரை விட சிறந்த 'பானம்' வேறெதுவுமில்லை.

என்ன சேர்? எங்கே கிளம்பிவிட்டீர்கள். பானை வாங்குவதற்குத்தானே! சரி போயிட்டு வாங்க.

இன்றைக்கு இதைப் பார்த்தவுடன் நாளைக்குச் சில வீடுகளில் என்ன நடக்கும் என்பதைப் பற்றி ஒரு சின்ன கற்பனை.

ஒரு பெரிய சங்கீத வித்துவான் கச்சேரிக்குப் புறப்பட்டார். அவர் கச்சேரியில் கடம் வாசிப்பவர்.

புறப்படுவதற்கு முன் மனைவியைக் கூப்பிட்டு, கச்சேரிக்குப் போகப் போகிறேன். அதற்கு முன் உன் கையால்'ஜில்லென்று' ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டுவந்து கொடு. குடித்துவிட்டுப் போகிறேன்" என்றார்.

அந்த அம்மாவும் கொண்டு வந்து கொடுத்தார்.

வாங்கிக் குடித்துவிட்டு, "பேஷ்! மண்பானைத் தண்ணியா? காலமறிந்து, இடமறிந்து, சமயமறிந்து நடப்பதில் உன்னை யாரும் மிஞ்ச முடியாது. ரொம்ப நன்றி" என்றார்.

"உங்களுக்குத்தான் நன்றி சொல்லவேண்டும்" என்றார் அந்த அம்மா.

" ஏன்" என்று கேட்டார் இவர்.

" நேற்று இன்று ஒரு தகவல் கேட்டேன். இன்றைக்கு நம்ம வீட்டில மண்பானையாக உபயோகப்படுவதே உங்களுடைய 'கடம்' தான். ரொம்ப நன்றி"என்றார் அந்த அம்மா.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# புதிய சிறகுகள் லங்கா கலை விழாவை முன்னிட்டு நடத்தப்படும் போட்டிகள்

லங்கா பாஸ்ட் பப்ளிஸ் நிறுவனத்தினால் புதிய சிறகுகள் லங்கா கலை விழாவை முன்னிட்டு போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிகள் பாடசாலை மாணவர்களுக்கும் மற்றும் திறந்த பிரிவாகவும் நடைபெறவுள்ளதுடன் தமிழ் அல்லது சிங்கள மொழியில் நடத்தப்படவுள்ளது. அத்துடன் காவியப் படைப்பு, பாடல் இயற்றுதல், சித்திரம் ஆகிய போட்டிகளுக்கான தலைப்பு வரையறுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் சித்திரப்போட்டியில் தரம் 1 முதல் 6 வரை ஆரம்ப நிலைப் பிரிவாகவும் தரம் 6 முதல் 13 வரை இரண்டாம் நிலை பிரிவாகவும் மற்றும் விசேட தேவையுடைய மாணவர்களுக்குமாக நடைபெறவுள்ளது. அத்துடன் பாடசாலை துறைப் படைப்புக்கள் அனைத்தும் பிஸ்டல் போர்ட்டிலும் திறந்த பிரிவு போட்டியாளர்கள் எந்தவொரு ஊடகத்தையும் பயன்படுத்தலாம் எனவும் இப்பிரிவுக்கு 32-22 அளவை விட சிறியதாக ஆக்கம் அமைந்திருத்தல் வேண்டும்.

மேலும் சிற்பம், காட்டூன் (கேலிச் சித்திரம்) என்பன திறந்த போட்டியாக மட்டுமே நடத்தப்படவுள்ளதுடன் சிற்பத்திற்கு எந்தவொரு ஊடகத்தையும் பயன்படுத்தலாம். காட்டூன்சித்திரம்ஏ4தாளில்அமைதல் வேண்டும்.

புகைப்படம், குறுநாடகம், குறுந்திரைப்படம் ஆகியன இருபிரிவுகளுக்குமாக நடத்தப்படவுள்ளதுடன் புகைப்படம் எல்லாம் 8X12 அங்குல அளவில் அனுப்ப வேண்டும். அதிகபட் சமமாக 12X18 அங்குலமாக அமைதல் வேண்டும் . குறு நாடகம் உயர்ந்த பட்சம் 40 நிமிடங்களாக அமைவதுடன் போட்டியில் கலந்து கொள்வ தற்காக குறிப்பிட்ட நாடக பிரதியின் ஆரம்ப மூன்று பிரதிகள் அனுப்ப வேண்டும். இக்குறு நாடக பிரதி களை ஒப்படைக்க வேண்டிய கடை சி திகதி ஜூலை 15 ஆம் திகதியாகும்.

குறுந்திரைப்படம் உயர்ந்த பட்சம் ஒடும்காலம் 20 நிமிடங்கள் அமைதல் வேண்டும். எல்லாப் படைப்புக்களும் ஆங்கிலத்தில் உப -தலையங்கம் பாவித்து பயன்படுத்த வேண்டும். அப்படி ஆங்கில உப தலையங்கங்கள் பயன்படுத்தாது அனுப்பப்படும் படைப்புகள் போட்டியில் முன்வைக்கப்படமாட்டாது.

மேலும் ஆய்வுக் கட்டுரை, ஆக்கபூர்வமான உயிர்ப்பூட்டல், படைப்பாற்றல் மிக்க புதிய இணையத் தளம் ஆகிய போட்டிகள் திறந்த பிரிவுக்கு மட்டும் நடத்தப்படவுள்ளதுடன் ஆய்வுக்கட்டுரை உயர்ந்த பட்சம் 1500 வாக்கியங்களுக்கு கூடுதலா்க அமைதல் வேண்டும்.


மேலும் இணையத்தளம் ஆக்கங்களை DVD மூலமாக அனுப்புவதுடன் HTML Format இன் கீழ் தயாரிக்க வேண்டும் Template பயன்படுத்த முடியாது எனவும் புதிய தொழில்நுட்பத்தை சேர்ப்பதைப் பற்றி கவனத்தில் கொள்ளப்படும் என குறிப்பிடப்படுகிறது.

மேலும் போட்டியாளர்கள் தங்களது ஆக்கங்களுடன் விண்ணப்பப் படிவத்தை அனுப்ப வைக்க வேண்டும் எனவும் பாடசாலை மட்டத்திலான போட்டியாளர்கள் தங்களது ஆக்கங்களை பாடசாலை அதிபரின் கையொப்பத்துடனான அத்தாட்சிப் பத்திரத்தையும் அனுப்புதல் வேண்டும் எனவும் மேல் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு புறம்பாக அனுப்பப்படும் ஆக்கங்கள் போட்டிக்கு ஏற்றக் கொள்ளப்படமாட்டாது எனவும் இப்போட்டிகளில் லங்கா பாஸ்ட் பப்ளிஸ் நிறுவனத்தின் ஊழியர் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் கலந்து கொள்ளமுடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆக்கங்களில் குறுநாடகம் தவிந்த மற்ற எல்லாப் போட்டிப் பிரிவுகளும் ஆக்கங்களை எதிர் வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் *புதிய சிறகுகள்*, லங்காகலை விழா 178 1/2 , பழைய கெஸ்பேவ வீதி, கங் கொடவில, நுகேகொடை என்ற முகவரி க்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மேலும் மேலதிக தகவல்களை தெரிந்து கொள்ள வேண்டுமாயின் 0113184228 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(6-4)



நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலயத்தின் சப்பறத் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. சுவாமி சப்பறத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள் பாலிப்பதை படத்தில் காணலாம்.

# இராசி பலன்

19.06.2010
(ஆனி 5, சனிக்கிழமை)
அட்டமி பின்னிரவு 12.03 மணிவரை
உத்தரம் முன்னிரவு 11.41 மணிவரை
இராகுகாலம் 8.54-10.24 மணிவரை
சுபநேரம் 2.54-4.24 மணிவரை
உதயம் ஆனி உத்தர தரிசனம்.


| | |
|---|---|
| மேடம் | தொழில் முன்னேற்றம், காரிய அனுகூலம், மன மகிழ்ச்சி, போசன சுகம். |
| இடபம் | மனச்சஞ்சலம், வியாபார நன்மை, பணவிரயம், உறவினர் சந்திப்பு. |
| மிதுனம் | அதிக பிரயாசை, சுபசெலவு, தாய்வழி உறவு, போசனசுகம். |
| கடகம் | சகோதரர் உதவி, காரிய அனுகூலம், பிரயாண நன்மை, பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | பணவிரயம், கௌரவக்குறைவு, முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை. |
| கன்னி | சயன சுகம், முயற்சிகைகூடும், உறவினர் வருகை, தன்னம்பிக்கை. |
| துலாம் | மனச் சஞ்சலம்,காரிய அலைச்சல், பித்தரோகம், உறவினர் சந்திப்பு. |
| விருச்சிகம் | காரிய நன்மை, பொருள் சேர்க்கை, கீர்த்தி, குடும்பமகிழ்ச்சி. |
| தனுசு | நல்லசெய்தி, அதிகாரம், தொழிலில் ஆர்வம், நண்பர்கள் உதவி. |
| மகரம் | கட்டுப்பாடு, பிரயாண நன்மை, தொழில் நன்மை, முயற்சி தாமதம். |
| கும்பம் | வீண்பகை, முயற்சி தாமதம், போசன சுகம், வாகன பயம். |
| மீனம் | களஸ்திரநன்மை, காரிய அனுகூலம், போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 180 | 120 |
| தக்காளி | 170 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 |
| கோவா | 100 | 100 |
| கரட் | 150 | 150 |
| பூசனி | 40 | 70 |
| புடோல் | 80 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 |
| பாகற்காய் | 160 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 |
| பயற்றங்காய் | 200 | 150 |
| லீக்ஸ் | 160 | 150 |
| பீற்றூட் | 100 | 100 |
| கறிமிளகாய் | 150 | 150 |
| முருங்கைக்காய் | 400 | 400 |
| போஞ்சி | 140 | 110 |
| கத்தரிதம்புள்ள | 70 | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 30 |
| தேசிக்காய் | 150 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 30 |








யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் இடம்பெற்ற தமிழ்மொழித்தின விழாவில் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினர் உரையாற்றுவதையும் மாணவிகளின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம்.ள

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் ம.க. சிவாஜிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளதாக சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்திற்கு கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.(6-4)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முகாமையாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் "வடமாகாணத்தின் அபிவிருத்தியில் நிதிச் சந்தையின் பங்களிப்பு" என்னும் விடயம் பற்றிய கருத்தரங்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிமுதல் 6.30 மணிவரை பருத்தித்துறை வீதி நல்லூரில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இலங்கை மின்சார சபைப் பிரதிப் பொதுமுகாமையாளர் ஆர். முத்துரட்ணானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் குறித்த விடயம் பற்றி ஹற்றன் நஷனல் வங்கியின் நிறைவேற்று இயக்குநர் இராஜேந்திரா தியாகராஜா கருத்துரை வழங்கவுள்ளார். (4-3)

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையினால் நகரசபை எல்லைக்குட்பட்ட திணைக்களங்களின் தலைவர்களுடனான உள்ளூராட்சி மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி நகரசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் திணைக்கள தலைவர்களை கலந்து கொண்டு தங்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்குமாறு சபை செயலாளர் செல்வி வி.சிவக்கொழுந்து அறிவித்துள்ளார்.(4-29)

## மாகாண மட்ட கரப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

(துனங்கிளப்பு)

வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடத்திய மாகாண மட்ட கரப்பந்தாட்டப் போட்டி ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் இருபாலாருக்குமான போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு,

**15 வயது பிரிவு**

*ஆண்கள்*

ஆவரங்கால் நடராஜ இராம லிங் கம் வித்தி, சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,

*பெண்கள்*

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வவுனியா கிடாச்சூரி மகாவித்தியாலயம், அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்,

**17 வயது பிரிவு**

*ஆண்கள்*

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம், வவுனியா கிடாச்சூரி ஜி.ரி.எம்.எஸ்,

*பெண்கள்*

அளவெட்டி அருணாச்சலம் வித்தியாலயம், தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி, மன்னார் தோட்ட வெளி ஜி.ரி.எம்.எஸ்

**19 வயது பிரிவு**

*ஆண்கள்*

புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி, மன்னார் தோட்டவெளி ஜி.ரி.எம். எஸ், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,

*பெண்கள்*

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.(6-4)

## கடும் காற்றினால் படகு கவிழ்ந்து மீனவர்கள் படுகாயம்

(கரவெட்டி)

வடமராட்சி கடற்பரப்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மீன் பிடித்துக் கொண்டிருந்த வேளை கடும் காற்று வீசியதில் படகு கவிழ்ந்து 4 மீனவர்கள் படுகாயம் அடைந்த நிலையில் மந்திகை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, கடந்த வியாழக்கிழமை காலை மணற்காட்டு கடற்பரப்பில் கடும் காற்றினால் பேரலைகள் எழுந்து மீன்பிடிப்படகை தாக்கியதில் படகு கவிழ்ந்தது. இதனால் இதில் பயணம் செய்த கற்கோவளத்தைச் சேர்ந்த வைரமுத்து தர்மகுலசிங்கம் (வயது -62), நடராசா திகனேஸ்வரன் (வயது 35) என்ற இரு மீனவர்களும் அதேசமயத்தில் நேற்று காலை 10.30 மணியளவில் கற்கோவள கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையில் பருத்தித்துறை கொட்டடியைச் சேர்ந்த இராமலிங்கம் ஜெயசந்திரன் (வயது-35), பருத்தித்துறை ஓடை கரையைச் சேர்ந்த புஸ்பராசா நிரோசன் (வயது-20) என்ற 4 மீனவர்களுமே படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறு இரு நாட்களாக கடும்காற்று வீசுவதால் பேரலைகளினால் படகுகள், மீன்பிடி உபகரணங்கள் என்பன சேதமடைவதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.(6-4-24)

## தரம் 5 மாணவர்களுக்கான மாதிரி புலமைப்பரிசில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் தரம் 5 மாணவர்களுக்கான மாதிரி புலமைப்பரிசில் வினாத்தாள் யாழ்.மாவட்டத்திலுள்ள சகல கோட்டக் கல்வி அலுவலகங்ளிற்கும் வழங்கப்பட்டுள்ளது.

அவற்றை தரம் 5 பாடசாலை அதிபர்கள் இன்று காலை 8 மணிக்கு முன்னர் பெற்று அப்பரீட்சைகளை நடத்தி பகுப்பாய்வை மேற்கொண்டு அவற்றினை வலயக் கல்வி அலுவலக ஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்குமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவுறுத்தியுள்ளார். (6)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதலாம் மற்றும் இரண்டாம் வருட முகிழ்நிலை ஆசிரியர்கள் அனைவரையும் பங்குகொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (6)

## சனசமூக நிலைய சம்மேளன கூட்டம்

(கல்வயல்)

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் ஸ்தாபித்தல் தொடர்பான கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சனசமூக நிலையத்தின் தலைவர், செயலாளர் உட்பட நிலைய உறுப்பினர்கள் 5 பேர் தவறாது சமூகமளிக்குமாறு நகரசபை செயலாளர் தெரிவித்துள்ளார். (4-31)





## பொருளியல் பாட விசேட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் பொருளியல் பாடத்திற்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட இலவச கருத்தரங்கு எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.






இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகத்தர்களால் இக் கருத்தரங்கு நடத்தப்பட உள்ளதால் இதில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் சீருடையுடன் வருகை தருமாறு ஸ்ரான்லிக் கல்லூரியின் அதிபர் வே.ஞானகாந்தன் அறிவித்துள்ளார். (4)






மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் முன்னெடுக்கப்படும் போஷாக்கு குறைந்த சிறுவர், கர்ப்பிணிகளுக்கான போஷாக்கு திட்டத்தின் கீழ் வேலணைப் பிரதேசத்தில் 8 கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட சிறுவர்கள்,கர்ப்பிணிகள் உட்பட 400 பேருக்கு சத்துமா வழங்கப்பட்டது.இந்நிகழ்வில் மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் திருமதி சரோஜா சிவசந்திரன் சிறுமி ஒருவருக்கு சத்துமா வழங்குவதையும் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளையும் படங்களில் காணலாம்.





ஜப்பான் அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட விவசாய உபரகணங்களை கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி மாவட்டசெயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக் கலந்துகொண்ட இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் யசூசி அகாசி, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன், விவசாய அமைச்சர் யாப்பா அபேவர்த்தன, ஜப்பான் ஜெய்க்கா பிரதிநிதி ஆகியோர் அழைத்து வரப்படுவதையும் ஜப்பான் தூதுவர், விவசாய அமைச்சர் ஆகியோர் உரையாற்றுவதையும் பொருளாதார அமைச்சர் விவசாய இயந்திரத்தை இயக்குவதையும் வடமாகாண ஆளுநர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சிவஞானம் சிறிதரன் ஆகியோர் விவசா யிகளுக்கு உபகரணங்களுக்கான திறப்பை கையளிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட அரச அதிபர்கள், மாகாண செயலா ளர்கள் மற்றும் விருந்தினர்களையும் விவசாயிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# மீள்குடியேற்றப்பட்ட இடம்பெயர்ந்த மக்களின் பரிதாப நிலை

## ஆனந்தசங்கரி ஜனாதிபதிக்கு கடிதம்



வன்னியிலும் வடகிழக்கின் வேறு பகுதிகளிலும் நடந்துள்ளவை ஒரு சிறிய சூறாவளியோ அல்லது ஒரு சிறிய பூமி நடுக்கமோ அல்ல. நாட்டின் 8 மாவட்டங் களில் வாழ்ந்த சில இலட்சம் மக்களின் வாழ்வையும் அவர்களின் இருப்பிடங்களை யும் நேரடியகாகப் பாதித்துள்ள சம்பவம் என்பதை நாம் மறுக்க முடியாது.வன்னி மக்கள் தாங்க முடியாத துன்பத் தை அனுபவித்து விட்டார்கள். அவர்களை அக் கறையுடனும் பாதுகாப்பாகவும் கவனிக்க வேண்டும்.இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஜனாதி பதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப் பிட்டுள்ளார்.அதில் அவர் மேலும் தெரிவிக் கையில்,

மீள் குடியேற்றப்பட்ட உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் பரிதாப நிலைமை பற்றி தங்களின் கவனத்துக்கு கொண்டுவர என்னை அனுமதிக்கவும். பொறுமையுடனும் அவர்களின் மீது மிக்க அனுதாபத்துடனும் இதைப் படிப்பீர்களேயானால் நிச்சயமாக உங்களுக்கு என் மீது அதிருப்தி ஏற்பட மாட்டாது.

நீங்களும் உங்கள் குழுவினரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்து உரையாடிய விடயங்கள் பற்றி தெரிவித்த கருத்துடன் எனக்கு உடன்பாடு இல்லை. அக்கருத்து இடம்பெயர்ந்த மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தையும் ஆதங்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தடுப்புக் காவலில் உள்ள எம் பிள்ளைகள் தாமதமின்றி விடுவிக்கப்படுவார்கள் என்றும் தேவைக்கேற்ப வீடுகள் புதிதாக கட்டிக் கொடுக்கப்படும் என்றும் சேதமடைந்த வீடுகள் திருத்தியும் கூரையற்றவைக்கு கூரை போட்டு வழங்கப்படும் என்றே மக்கள் நம்பியிருந்தனர்.

பலாத்காரமாக இயக்கத்தில் சேர்க் கப்பட்ட பிள்ளைகளே இடம்பெயர்ந்த மக்க ளின் பெறுமதி மிக்க பெரும் சொத்தாகும். அதிகாரிகள் அப்பிள்ளைகளை சிறிய அளவில் விசாரித்து விடுதலை செய்கிறோம் என்ற வாக்குறுதிகளை காப்பாற்றத் தவறி விட்டார்கள் என்று ஏமாற்றம் அடைந்துள்ளனர். நலன்புரி நிலையங்களுக்கு வந்தடைந்தவர்களில் ஒரு நாள் பயிற்சி பெற்றவர்கள் கூட, உயர் அதிகாரிகளிடம் பதிவு செய்ய வேண்டுமென ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டு அவர்கள் மிக விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என அறிவித்தலும் கூட வந்தது. தமக்கு மாத்தளனில் இருந்த போது தப்பிப் போக சந்தர்ப்பங்கள் இருந்தும் போர் முனையில் வைக்கப்பட்டிருக்கும் பிள்ளைகளுடன் தான் செல்ல வேண்டும் என்ற உறுதியுடன் இருந்ததாக அம்மக்களில் பலர் கூறுகின்றார்கள்.

எனது ஆலோசனைகளை கேட்பீர்களேயானால், எதுவித பிரச்சினையோ எதிர்ப்போ இன்றி அவர்களை விடுதலை செய்ய முடியும். ஒரு முதிய சட்டத்தரணி, அத்தியட்சகர் தரத்தில் சேவையில் உள்ள அல்லது இளைப்பாறிய ஒரு பொலிஸ் அதிகாரி ஒரு கௌரவமான பிரஜை ஆகிய மூன்று பேர் கொண்ட சில குழுக்களை அமைத்து ஒவ்வொரு தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களையும் விசாரித்து, அவர்களின் பின்னணி, பெற்றோரின் அபிப்பிராயம் முதலியவற்றை அறிந்து ஆர்வத்துடன் இயக்கத்தில் செயற்பாதவர் எனக் கருதினால் அக்குழுக்களில் சிலர் இவ் சம்பந்தப்பட்டவரை விடுவிக் கலா ம்.

இக்குழுக்கள் எந்த அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டுமென தீர்மானிக்க வேண்டியது தாங்களே. இது உடனடியாக செய்யக்கூடியதாகும். இதே அடிப்படையில் நீண்ட நாட்களாக சிறையில் வாடும் அரசியல் கைதிகளுக்கும் இக்குழுக்களின் சிபார்சில் விடுவிக்கலாம் அல்லது பிணையில் செல்ல சிபாரிசு செய்யலாம்.

இதே வேளை தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரங்களை தெரிவிப்பீர்களேயானால் தம்பிள்ளைகளை காணவில்லை எனத் தவிக்கும் பெற்றோர்களுக்கு பிள்ளைகள் இருக்கிறார்களா இல்லையா என அறிந்து கொள்ள முடியும்.

வன்னியிலும் வடகிழக்கின் வேறு பல்வேறு பகுதிகளிலும் நடந்துள்ளவை ஒரு சிறிய சூறாவளியோ அல்லது ஓர் சிறிய பூமி நடுக்கமோ அல்ல என்பதையும் நாட்டின் 25 மாவட்டங்களில், 8 மாவட்டங்களில் வாழ்ந்த சில இலட்சம் மக்களின் வாழ்வை யும் அவர்களின் இருப்பிடங்களையும் நேரடி யாக பாதித்துள்ள சம்பவம் என்பதனை நாம் மறந்து விட முடியாது.

பாதிக்கப்பட்ட 8 மாவட்டங்களில் கிளிநொச்சி,முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்களும் அழிந்து நாசமாகி பல்லாயிரக் கணக்கான வீடுகளும் தரைமட்டமாகியும் இன்னும் பல மோசமாக உடைந்து மீளக் கட்ட வேண்டிய நிலையில் உள்ளன. பெரும் தொகையான வீடுகள் யன்னல்,கதவுகள், வளைவுகள், தீராந்திகள், கூட இல்லாத நிலையில் காணப்படுகின்றன. இதைத் தொடர்ந்து மோசமாக வவுனியா,மன்னார் மாவட்டங்களும் இதற்கடுத்ததாக யாழ்ப்பாண மாவட்டமும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

கண்ணால் பார்த்தால் தான் நம்பமுடியுமாதலால் நீங்கள் ஒரு தடவைஇவ்வாறு பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட வேண்டும். மீளக் குடியேற்றப்பட்ட இவர்களின் பரிதாப நிலையை அண்மையில் நான் நேரில் சென்று பார்த்த போது, என் கண்ணீரை கட்டுப்படுத்த முடியவில்லை.

தயவு செய்து நான் அரசியல் இலாபம் தேடுவதாக எண்ணவேண்டாம். அர்ப்பணிப்புடனும் அக்கறையுடனும் என்னால் வழி நடத்தப்பட்ட வன்னிமக்கள் தப்பாக வழி நடத்தப்பட்டுள்ளனர். என்னைப் போல அவர்களுக்கு அக்கறையுடன் சேவையாற்ற எவரும் அங்கு செல்லமாட்டார்கள். வன்னி மக்கள் தாங்கமுடியாத அளவு துன்பத்தை அனுபவித்து விட்டார்கள் தாங்கமுடியாத அளவு என்று இரண்டொரு வருடங்கள் அல்ல கால் நூற்றாண்டுக்கும் மேலாக அவர்களை



அக்கறையுடனும் பாதுகாப்பாகவும் கவனிக்க வேண்டும்.

இனித் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளேன். அவர்கள் கவனிக்கப்படும் முறை எனக்கு திருப்தி அளிக்கவில்லை. தயவு செய்து வன்னி மீள் குடியேற்றம், அபிவிருத்தி ஆகிய இரண்டையும் என்னிடம் விட்டுவிடுங்கள் சகல அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்தையும் வன்னியில் சேவை செய்ய அனுமதியுங் கள் அவர்கள் மீது நம்பிக்கை இன்றேல் அவர்களின் நடவடிக்கைகளை அவதானி யுங்கள்.

இறுதியாக கூறுவது யாதெனில், ஏற்பட்டுள்ள பெரும் அழிவுக்கு அரசை முழுமையாக குற்றம் கூறமுடியாவிட்டாலும் வடக்கு கிழக்கில் வீடில்லா மக்களுக்கு வீடு கட்டி கொடுக்க வேண்டிய பொறுப்பை அரசு தட்டிக்கழிக்க முடியாது. 50 ஆயிரம் வீடுகளை கட்டிக் கொடுக்க இந்திய அரசு முன்வந்தமையை பாராட்டிக்கொண்டு இந்தப் பிரச்சினையில் மற்றைய நாடுகளுடனும் சர்வதேச அமைப்புக்களுடனும் பேசினால் அவர்கள் மிக்க மகிழ்ச்சியு டன் உடன்படுவார்கள். ஒரே அடியாக அத்த னையையும் இழந்து அகதியாக நிற்கும் மக்கள் நட்ட ஈடு கேட்பதை நியாயமற்ற கோரிக்கையாக கொள்ள முடியாது. நன்கொடை வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஓர் குழு அழிவுகள் ஏற்பட்டுள்ள இடங்களை பார்வையிட வைப்பது நன்றாகும் என்று தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.








தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்ட முத்திரை வெளியீட்டுவிழா நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அஞ்சல் திணைக்கள முத்திரைப் பணியகப் பணிப்பாளர் ஜே.எம்.டி.என்.அஸ்நேசன் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் பிரதம விருந்தினர் மங்கல விளக்கேற்றுவதையும் பாடசாலை மாணவி வரவேற்புரை நிகழ்த்துவதையும் கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் தலைமையுரையாற்றுவதையும் பிரதம விருந்தினர் முத்திரையை வெளியிட கல்லூரியின் பழைய மாணவரும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தருமான பேராசிரியர் என்.சண்முகலிங்கன் பெற்றுக்கொள்வதையும் அருகில் கல்லூரியின் பழைய மாணவரும் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருமான வைத்தியகலாநிதி ச.சிறிபவானந்தராஜா நிற்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-சுதாகர்)

# பாசித் தாவரத்தைப் பயன்படுத்தி சேதனப் பசளை தயாரிக்கும் திட்டம்



(கொழும்பு)

குளங்களில் வளரும் பாசித் தாவரத்தைக் கொண்டு சேதனப்பசளை தயாரிக்கும் முறை ஒன்றை அறிமுகம் செய்ய விவசாய நீர்ப் பாசன அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா திட்டமிட்டுள்ளார்.

இதன் முதற்கட்டமாக ராஜாங்கனை குளத்திலுள்ள பாசித் தாவரங்களைப் பயன் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றை விவசாயிகளுக்கு விற்பனை செய்வதன் மூலம் கணிசமான வருவாய் கிடைப்பதுடன் சுற்றாடல் மாசடைவதும் தடுக்கப்படும் என்றும் சூழல் சமநிலையையும் இதன்மூலம் பேண முடியும் என்றும் தெரிவித்துள்ளார். (6-4)

# கல்வி மறுசீரமைப்பு ஆலோசனை குழுவின் கலந்துரையாடல்

(கொழும்பு)

கல்வி மறுசீரமைப்புத் தொடர்பான கல்வி ஆலோசனைக் குழு எதிர்வரும் 23ஆம் திகதி கூடவுள்ளது.

தேசியக் கல்விச் சட்டம் மற்றும் மறுசீரமைப்புத் தொடர்பாக அன்றைய தினம் கலந்துரையாடப்படுமெனக் கல்வியமைச் சின் செயலாளர் சுனில் சிறிசேன கூறியுள்ளார்.

புதிய கல்விச் சட்டத்தைத் தயாரிப்பதற்காகக் குழுவொன்றையும் அன்றைய தினம் நியமிக்கவுள்ளதாக அவர் கூறினார்.

இந்தக் குழுவினரால் தயாரிக்கப்படும் சட்டமூலம் தொடர்பாகக் கல்வித் துறையின் அனைத்துப் பிரிவினருடனும் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் அனைவரினதும் கருத்துக்களைக் கேட்டறிந்ததன் பின்னர் புதிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படுமெனவும் கல்வியமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# இலங்கையுடன் இணைந்து புலிகளை கட்டுப்படுத்த மலேசியா தயார்

## அந்நாட்டு பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த இலங்கையுடன் இணைந்து செயல்படவிருப்பதாக மலேசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மலேசிய பொலிஸ்மா அதிபர் மூசா ஹசன் சீனாவின் சின் ஹவா சர்வதேச இணையத்தளத்துக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் இத் தகவலை தெரிவித்துள்ளார்.

புலிகளின் தலைவர்கள் மலேசியாவில் பதுங்கி இருப்பதாக வெளியான செய்திகள் குறித்து தாம் கவலை அடைவதாகவும் எனினும் இந்த தகவல் வெளியானதில் இருந்து எந்த ஒரு போராட்டக்குழுவின் உறுப்பினர்களும் மலேசியாவில் இதுவரையில் அவதானிக்கப்படவில்லை என்றபோதிலும் மலேசிய பொலிஸார் தொடர்ந்தும் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



எவ்வாறெயினும் புலிகளின் தலைவர்கள், மலேசியாவில் இருந்து தமது இயக்கத்தை உருவாக்க முயற்சிக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், மலேசியாவில் இயங்குகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களும் தனி நிறுவனங்களும் புலிகளுக்கு ஆதரவு தெரிவிப்பதாக தகவல்கள் வெளியாகின.

இதுகுறித்து எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கிய அவர் அவற்றுக்கான ஆதாரங்கள் எவையும் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் மலேசிய மக்கள் எந்த ஒரு போராட்டக் குழுவினராலும் இலக்கு வைக்கப்படவோ மலேசியாவை தமது பயிற்சி பெறும் தளமாகப் பயன்படுத்தவோ இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

ஏற்கனவே மலேசிய பொலிஸார் சிறப்பாக செயற்பட்ட பல போராட்ட இயக்கங்களின் உறுப்பினர்களை கைது செய்துள்ளமையை சுட்டிக்காட்டிய அவர், இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பில் தெற்காசிய நாடுகளுடன் தகவல் பரிமாற்றங்களில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (6)

இலங்கை செஞ்சிலுவைச்சங்க வலிகிழக்கு கோப்பாய் பிரிவுக்கு, பிரமுகர் ஒருவரால் வழங்கப்பட்ட ஒரு தொகுதி நுளம்பு வலைகள் நோயாளர் நலன் கருதி கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு வைபவரீதியாக கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையின் உபதலைவர் லயன் வைத்திய கலாநிதி வை.தியாகராசாவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலிகிழக்கு கோப்பாய் பிரிவின் தலைவர் இ.மயில்வாகனமும் வைத்தியசாலை பொறுப்பதிகாரி திருமதி லக்ஸ்மனிடம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படத்தில் காணலாம்.

(படம்:- நல்லூர் நிருபர்)

# வவுனியா அஞ்சல் நிலையத்தில் அடையாள அட்டைகள் தேக்கம்

(கொழும்பு)

பல்வேறு இடங்களிலும் காணாமல் போன அடையாள அட்டைகள் சாரதி அனுமதிப்பத்திரங்கள் கடவுச்சீட்டுகள் மற்றும் நலன்புரி நிலைய அடையாள அட்டைகள் என்பன உரியவர்கள் பெற்றுக்கொள்ளாமையினால் வவுனியா அஞ்சல் நிலையத்தில் தேங்கிக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அஞ்சல் பெட்டிகளிலும் வீதிகளில் இருந்தும் எடுக்கப்பட்ட இந்த அடையாள அட்டைகளை உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக்கொள்ளவும் இவ்வாறான அடையாள அட்டைகளானது பணப்பையை திருடியவர்கள் அடையாள அட்டையை அஞ்சல் பெட்டிகளில் இட்டுச்செல்வதால் கிடைக்கப்பெற்றவை என அங்கிருந்து கிடைக்கும் தகவல் தெரிவிக்கின்றன. (6)

# புலிகளின் பாடல்களை கணனியில் வைத்திருந்த சந்தேக நபர் கைது

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிரான விடுதலைப் புலிகளின் செயல்களை சித்தரிக்கும் காட்சிப் பொருட்கள் மற்றும் பாடல்களை கணனியில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபர் ஒருவர் வவுனியாவில் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், மேற்படி விடுதலைப் புலிகளின் செயல்களை சித்தரிக்கும் காட்சிப் பொருட்களையும் பாடல்களையும் சந்தேக நபர் கையடக்கத் தொலைபேசி ஊடாக வாடிக்கையாளர்களுக்கு விநியோகித்திருந் தமை தொடர்பில் பொலிஸாரின் விசார ணைகளிலிருந்து தெரியவந்திருப்பதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (6-4)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவ அவுஸ்திரேலியா முன்வந்துள்ளது

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவி வழங்க அவுஸ்திரேலியா முன்வந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் மோதல்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான திறந்த விவாதம் நியூயோர்க் நகரில் இடம்பெற்ற போது இந்த உதவியை அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

இதற்காக அவுஸ்திரேலியா ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கி யுள்ளதுடன் மேற்படி நிதியுதவியானது ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்தினூடாக மோதல்களால் பாதிக்கப்பட்ட இலங்கை உள்ளிட்ட நாடுகளின் சிறுவர்களின் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படவுள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுவர்களை பாதுகாப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டும் என அவுஸ்திரேலிய தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (6-4)

# மன்னார் மாவட்டத்தில் நீதித்துறை விரிவாக்கம்

(கொழும்பு)

மன்னார் மாவட்ட நீதித்துறை தற்பொழுது விரிவாக்கப்பட்டு வருகின்றது. முன்பு ஒரு நீதிபதியின் கீழ் இயங்கி வந்த இரு நீதிமன்றங்கள் தற்பொழுது இரு நீதிபதிகளின் கீழ் இயங்க ஆரம்பித்துள்ளன.

மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றமும் மாவட்ட நீதிமன்றமும் கடந்த காலங்களில் ஒரே நீதிபதியின் கீழ் இயங்கி வந்தது.

ஆனால் இம்மாதம் முதல் இவ்விரு நீதிமன்றங்களும் இரு வெவ்வேறு நீதிபதிகளால் இயங்கிவருகின்றன.

தற்பொழுது மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதியாக ஐ.பையாஸ் ரஸாக்கும் மன்னார் மாவட்ட நீதிபதியாக எ.யூட்சனும் பொறுப்பேற்று செயற்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# இவ்வருட இறுதிக்குள் சீபா ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் - அரசு உறுதியளிப்பு

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் இந்தியாவுடன் சீபா ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

சீபா ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் நிலவி வந்த கருத்து முரண்பாடுகள் களையப்பட்டுள்ளதாக அரசாங்கத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருத்தங்கள் எதுவும் மேற்கொள்ளாது சீபா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால் அதில் இலங்கைக்கு பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

இலங்கையில் துரித அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஒப்பந்தத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதுடன் சீபா உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் அதனுடன் தொடர்புடைய தரப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (6-4)

# 19.06.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- *1269* - பிரான்சில் மஞ்சள் அடையாளம் இல்லாமல் பொதுவில் திரியும் அனைத்து யூதர்களும் தண்டம் செலுத்த வேண்டும் என ஒன்பதாம் லூயி மன்னன் கட்டளையிட்டான்.
- *1870* - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அனைத்து தெற்கு மாநிலங்களும் ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கப்பட்ட பின்னர் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.
- *1910* - அமெரிக்காவில் வோஷிங்டனில் முதல் தடவையாக தந்தையர் நாள் கொண்டாடப்பட்டது.
- *1912* - ஐக்கிய அமெரிக்காவில் 8 - மணி நேர வேலைத்திட்டம் அமுலாகியது.
- *1943* - டெக்சாசில் இனமோதல் இடம்பெற்றது.
- *1944* - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் பிலிப்பைன்ஸ் கடல் சமர் இடம்பெற்றது.
- *1953* - அமெரிக்காவின் அணுவாயுத இரகசியங்களை சோவியத் ஒன்றியத்துக்கு வழங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு ஜூலியஸ் மற்றும் எத்தல் ரோசன்பேர்க் என்ற யூதத் தம்பதிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.
- *1961* - குவெத் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- *1987* - ஸ்பெயினில் கடைத்தொகுதி ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 21 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- *1623* - இலாய்சி பாஸ்கல், பிரெஞ்சு அறிவியலாளர் (இ.1662)
- *1903* - வால்ரர் ஹமொண்ட், இங்கிலாந்துத் துடுப்பாட்டக்காரர் (இ.1965)
- *1947* - சல்மான் ருஷ்டி, இந்திய எழுத்தாளர்
- *1970* - ராகுல் காந்தி, இந்திய அரசியல்வாதி
- *1978* - டெர்க் நொவிட்ச்கி, ஜெர்மன் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

- *1867* - முதலாம் மாக்சிமிலியன், மெக்சிக்கோ மன்னன் (பி.1832)
- *1993* - வில்லியம் கோல்டிங், நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய எழுத்தாளர்

**1867 - மெக்சிக்கோவின் மன்னன் முதலாம் மாக்சிமிலியன் மரணதண்டனை விதிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப் பட்டான்.**



# ஆனி மாதப் பலன்கள்

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் பாதம்)

**அடுத்தவர்களின் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும் தனுசு இராசி நேயர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது மாதத் தொடக்கத்தில் அஷ்டமாதிபதி சந்திரனும், ஆறுக்கு அதிபதி சுக்ரனும் ஒன்று கூடி விபரீத ராஜயோகத்தை உருவாக்கும் விதத்தில் சஞ்சரிக்கின்றன.

கடந்த சில மாதங்களாக செவ்வாய் அஷ்டமத்தில் சஞ்சரித்து கவலைகளையும் பல விதங்களில் இடையூறுகளையும் கொடுத்திருக்கலாம். அந்தநிலை இப்பொழுது மாறுகிறது. செவ்வாய் பெயர்ச்சி உங்களுக்கு ஒரு சிறப்பான மாற்றத்தைக் கொடுக்கும் என்றே சொல்ல வேண்டும்.

பத்தில் சனி சஞ்சரித்தால் பலரையும் வைத்து வேலை செய்யும் யோகம் உண்டு என்பது முன்னோர் வாக்கு. அந்த அமைப்பு இப்பொழுது உருவாவதால் மூடிக்கிடந்த தொழில்களுக்கு திறப்பு விழா நடத்துவீர்கள்.

தேடிய சுகங்களும் சந்தோஷங்களும் வந்து சேரும். திறமை மிக்கவர்களின் ஒத்துழைப் போடு நல்ல காரியங்கள் பலவற்றையும் செய்யப் போகிறீர்கள்.

இராசிநாதன் குரு வக்ரம் பெறும் நேரத்தில் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது என்றாலும் உடல் ஆரோக்கியத்தில் ஓரளவு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும். மருத்துவச் செலவுகள் கூடும். குரு பிரீதியை முறையாகச் செய்தால் கொடுக்கும் பலன்கள் நற்பலன்களாக மாறும்.

ஜூன் 16 ஆம் திகதி மிதுன இராசியில் புதன் சஞ்சரிக்கிறார். ஏழுக்கு அதிபதி ஏழில் சஞ்சரிக்கும் பொழுது இல்லத்தில் சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக் கசப்புகள் மாறும். ஜூலை 2 ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்க போகிறார்.

அஷ்டமாதிபதி அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் பொழுது சில எதிர்பாராத விரயங்களையும் சந்திக்க நேரிடலாம். வீண்விரயங்களாக இல்லாமல் சுப விரயங்களாக மாற வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வது நல்லது.

ஜூலை 12 ஆம் திகதி சிங்க இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 6 க்கு அதிபதியும் 12 க்கு அதிபதியும் ஒன்று கூடுவதால் திட்டமிடாது செய்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். இடம், பூமி வாங்கியும் விற்பனையாகி விட்டதே என்று கவலைப்பட்டவர்கள் மீண்டும் வாங்கும் சூழ்நிலை உருவாகும். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

ஜூலை 15 ஆம் திகதி மீன இராசியில் குரு வக்ரம் பெறுகிறார். இராசிநாதன் வக்ரம் பெறும் பொழுது எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. திடீரென திட்டங்களை மாற்றுவீர்கள். நட்பு பகையாகும். பகை நட்பாகும். சுக ஸ்தானத்தில் குரு வக்ரம் பெறுவதால் மருத்துவச் செலவுகள் தவிர்க்க முடியாததாக அமையும். குரு வழிபாட்டை மேற்கொள்ளும் பொழுது திசை மாறிய குரு உங்களுடைய சிக்கல்களை மாற்றும்.

துர்க்கை வழிபாடு துயரங்களைத் தீர்க்கும். வடக்கு நோக்கிய அம்மன் இருக்கும் ஆலயத்திற்குச் சென்று துர்க்கை துதி பாடல்களை பாட வழிபட்டு வாருங்கள்.

## மகரம்

(உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதம்)

**நம்பியவர்களுக்கு கை கொடுத்துதவும் நல்ல உள்ளம் படைத்த மகர இராசி நேயர்களே!**

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். விரய ஸ்தானத்தில் இராகு சஞ்சரிக்கிறார். எனவே, எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில் சில இடையூறுகள் ஏற்படலாம். வந்த துயரங்கள் விலகிச் செல்ல வழிபாடுகள் தான் உங்களுக்கு கை கொடுக்கும்.

மாதத் தொடக்கத்தில் சப்தம ஸ்தானத்தில் சப்தமாதிபதியுடன் சுக்ரன் கூடியிருப்பது அவ்வளவு நல்லதல்ல. குடும்ப பிரச்சினைகள் கூடலாம். அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் சென்றால் தான் எதிர்பார்த்தபடி ஆதாயம் பெற முடியும். சுக்ரனை குரு பார்ப்பதால் வந்த வரன்கள் பொருத்தமற்றதாக போகலாம். முடிவு செய்யப்பட்ட சில தகவல்கள் மாற்றம் செய்யப்படலாம்.

தொழில் வளர்ச்சியில் பழைய பங்குதாரர்கள் விலகினாலும் மாற்றினத்தவர்களின் பங்கு கூடும். இடம் , பூமி விற்பனையில் தாமதம் ஏற்படலாம். வாகனங்களில் செல்லும் பொழுது வழிகளில் விழிப்புணர்ச்சி தேவை. மருத்துவச் செலவு கூடும். மாதம் என்பதால் அங்காரக வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. சுயஜாதகத்தில் செவ்வாயின் பாதசார பலமறிந்து அதற்குரிய கிரகத்தில் நவாம்ச சஞ்சார பலன் அறிந்து பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது.

ஜூன் 16 ஆம் திகதி மிதுன இராசியில் புதன் சஞ்சரிக்கிறார். ஆறுக்கு அதிபதி ஆறில் சஞ்சரிக்கும் பொழுது, கடன் சுமை கூடும். உத்தியோகத்தில் வேலைப் பளு அதிகரிக்கும். எதிரிகளின் பலன் கூடும். இந்த நேரத்தில் எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. ஆரோக்கிய குறைபாடும், மருத்துவச் செலவுகளும் தவிர்க்க முடியாததாக அமையும். ஜூலை 2 ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இது யோகம் தான். ஒன்பதுக்கு அதிபதியாகவும் புதன் விளங்குவதால் பங்காளிப்பகை மாறும். தந்தை வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். வாழ்க்கை தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

புத்திர ஸ்தானாதிபதி சுக்ரன் ஜூலை 12 ஆம் திகதி அஷ்டமத்தில் சஞ்சரிப்பதால் பிள்ளைகள் வழியில் ஒரு பெரும் விரயம் ஏற்படலாம். பழைய ஆபரணங்களைக் கொடுத்து விட்டு புதிய ஆபரணங்கள் வாங்குவதில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். பூர்வீக சொத்துக்களால் பிரச்சினைகள் உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. தொழில் ரீதியாக சிலரை நம்பி கொடுத்த தொகைகள் வருவதில் தாமதம் அடையலாம். பெண் தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வது. நல்லது.

**சிவல்புரி சிங்காரம்**

ஜூலை 15 ஆம் திகதி மீன இராசியிலுள்ள குரு வக்ரம் பெறுகிறார். இது நன்மைதான். விரயாதிபதி வக்ரம் பெறும் பொழுது, விரயம் குறையும். வரவு திருப்தி தரும். அதே நேரத்தில் சகோதர ஸ்தானாதிபதியாகவும் குரு விளங்குவதால் உடன் பிறப்புகள் வழியே பிரச் சினைகள் ஏற்படும். அவர்களின் உடல் ஆரோக்கியம் கருதி ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகும். குருப்ரீதி செய்வது நல்லது.

இல்லத்து பூஜை அறையில் கிருஷ்ணர் படம் வைத்து கிருஷ்ணருக்குரிய வழிபாட்டு பாடல்களை படித்து வழிபடுவது நல்லது. கிருஷ்ணர் வழிபாடு கீர்த்தியை வழங்கும்.ை

(வளரும்)

# மீள்குடியேற்றுமாறு கோரி மாணவர்கள் போராட்டம்

கிளிநொச்சி மத்திய கல்லூரி இடைத் தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள தங்கள் குடும்பங்களை உடனடியாக மீள்குடியேற்றம் செய்ய வேண்டும் எனக்கோரி அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த 40 மாணவர்கள் நேற்று முன்தினம் பாடசாலைக்குச் செல்லாமல் முகாம் வாசலை மறித்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

இந்த மாணவர்கள் திருவையாறு பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர் என்றும் இவர்கள் தினசரி அங்கு சென்று வருவதற்கான பஸ் போக்குவரத்து வசதிகளை அரசாங்கம் செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு அரச உயர் மட்டத்தினர் வருகை தரவிருந்ததையொட்டி கவனயீர்ப்புப் போராட்டமாகவே மாணவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் இரண்டு மணித்தியாலம் இந்த மறியல் போராட்டம் நீடித்ததாகவும் அங்கு காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் போராட்டத்தைக் கைவிட்டு மாணவர்களை செல்லுமாறு கோரிய போதிலும் மாணவர்கள் அதற்கு செவிசாய்க்கவில்லை.

எனினும் சுமார் 15 மாணவர்களை இராணுவத்தினர் பஸ் வண்டியில் ஏற்றி பாடசாலைக்கு அனுப்பி வைத்ததுடன் ஏனைய மாணவர்கள் அவ்விடத்தை விட்டு சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சாந்தபுரம் கிராமப்பகுதியைச் சேர்ந்த மக்கள் மெனிக்பாம் முகாமில் இருந்து கிளிநொச்சி மத்திய கல்லூரி இடைத்தங்கள் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும் இவர்கள் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இரு நூறுக்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த குடும்பங்கள் இந்த இடைத்தங்கல் முகாமில் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்பதும் சாந்தபுரம் ,முறிகண்டி பகுதிகளில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு இராணுவம் சிவில் அதிகாரிகளுக்கு அறிவித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(6)

## யோகாசன கருத்தரங்கு

ஓம் பதஞ்சலி யோககேந்திராவினால் நடத்தப்படும் யோகாசன கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் 9.30 மணிவரை யாழ் இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள சைவபரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பெண்களுக்கான யோகாசன பயிற்சியின் புதிய பிரிவுகள் ஆரம்பிக் கப்படவுள்ளதால் ஆர்வமுள்ளவர்கள் அன்றைய தினம் பதிவுகளை மேற்கொள்ளலாம் என யோகாசனப் பயிற்சி ஆசிரியர் அறிவித்துள்ளார். (4)

## மானிப்பாய் தூயஅந்தோணியார் யாத்திரைத்தல விழா

மானிப்பாய் தூய அந்தோணியார் யாத்திரைத்தல விழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இதில் நாளை காலை 5.30 மணிக்கு திருப்பலியும் காலை 7.15 மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறவுள்ளது என அருட்பணி அ.ப.அன்ரனிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

(6-17





யாழ்.தேசிய கல்வியிற் கல்லூரியில் நடைபெற்ற டெங்கு ஒழிப்பு நிகழ்வில் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் கல்வியியலாளர்களும் சுற்றாடல் பாதுகாப்பு குழுவினரும் முகிழ்நிலை ஆசிரியர்களும் சிரமதானம் செய்வதை படங்களில் காணலாம்.

# இலங்கைக்கு யார் விஜயம் செய்தாலும்
# எமது நிலைப்பாட்டில் உறுதியாகவேயுள்ளோம்

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தருகின்ற இராஜதந்திரிகள் ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுடன் கலந்துரையாடுவதுடன் நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் விஜயங்களை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களின் வருகையை எம்மால் தடுத்து நிறுத்த முடியாதென அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜப்பானின் சமாதான ஏற்பாட்டாளரும் மீள்குடியேற்றம் மற்றும் மீள்நிர்மாணத்துறை பிரதிநிதியுமான யசூசி அகாசி , ஐக்கிய நாடுகளின் அரசியல் விவகாரங்களுக்கான செயலர் லியன் பாஸ்கோ உள்ளிட்டோரின் வருகையையும் போர்க் குற்றச்சாட் டுக்களையும் தொடர்புபடுத்தி எழுப் பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில் யுத்த குற்றம் இடம்பெற்றதாக கூறப்படுவது தொடர்பில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது என்றும் சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் மட்டுமன்றி பல்வேறு பட்ட நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் வருகை தந்து கொண்டிருக்கின்றனர்.

இலங்கைக்கு யார் விஜயம் செய்தாலும் எமது நிலைப்பாட்டில் உறுதியாகவே இருக்கின்றோம். அதன் அடிப்படையிலிருந்து நாம் விலகமாட்டோம். அத்துடன் சீபா ஒப்பந்தம் தொடர்பிலான அடிப்படை ஆவணத்தை நாம் கவனத்தில் கொண்டுள்ளோம். சீபாவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு திருப்தியுடன் அதில் கைச்சாத்திடுவோம் என்றும் அவர் கூறினார். (6)

# வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு 60 மில்லியன் யூரோ நிதியுதவி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளுக்காக 60 மில்லியன் யூரோக்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் மாலை தீவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் இந்த அறிக்கையை விடுத்துள்ளனர்.

இந்த நிதி வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்திக்காக குறுங்கால செயல் திட்டங்களை நோக்காகக் கொண்டு பயன்படுத்தப்படவுள்ளதாக கூறப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை தொடர்பிலான 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையிலான செயல் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது வழங்கத் தீர்மானித்துள்ள நிதியின் மூலம் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையிலான செயல் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் வாழ்வாதார மேம்பாட்டு வாய்ப்பு அதிகரிப்பு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக இந்தச் செயல் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நவாலி முருகானந்த முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முருகானந்த சனசமூக நிலைய முன்றலில் நிலையத்தின் தலைவர் சி.சுதர்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.க. சிவசோதி பிரதம விருந்தினராகவும் நவாலி சென்பீற்றர் றோ.க.த.க பாடசாலை அதிபர் யோ.எட்வேட் பங்கிராஸ், வலி.தென்மேற்கு பிரதேச சபை முன்பள்ளி இணைப்பாளர் திருமதி யோ.கேமநளினி மற்றும் நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவில் குருக்கள் பிரம்மஸ்ரீ சுந்தரதியாகராஜக் குருக்கள் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6)

# வடபகுதிச் சிறுவர்களை அடையாளம் காண கோரிக்கை

(கொழும்பு)

வடக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு புனர்வாழ்வளிக்கப்படும் சிறுவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைத் திணைக்களம் மக்களின் உதவியை நாடுகிறது என்றும் இந்த சிறுவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தாதவரை அவர்களைச் சமூகமயப்படுத்த முடியாதெனத் திணைக்களத்தின் ஆணையாளர் சரத் அபே குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

எனவே யுத்தச் சூழ்நிலையின் போது பிள்ளைகளைப் பிரிந்த பெற்றோர் அல்லது உறவினர்கள், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைத் திணைக்களத்திடம் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு திணைக்களம் பொதுமக்களைக் கோருகிறது. (6)

# போலி விசாவை பயன்படுத்தி வெளிநாடு செல்ல முற்பட்டோர் பிணையில் விடுதலை

(கொழும்பு)

போலி விசா பதியப்பட்ட கடவுச்சீட்டைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக பிரான்ஸ் செல்ல முயன்ற இருநபர்களை நீர்கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற நீதிபதி தலா மூன்று இலட்சத்து 25 ஆயிரம் ரூபா ரொக்கம் மற்றும் சரீரப் பிணையில் விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இரண்டு நபர்களே இவ்வாறு பிணையில் விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டவர்களாவர்.

சந்தேக நபர்கள் இருவரும் உறவினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு , தெமட்டகொடை பிரசேத்தை சேர்ந்த நபர் ஒருவரின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட போலி விசாவை பயன்படுத்தி மோசடியான முறையில் வெளிநாடு செல்ல முயன்ற சமயம், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவரும் வழக்கு விசாரணையின் போது பிணையில் விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளனர். (6)

# தனிப்பட்ட சிலரை திருப்திப்படுத்த வெற்றிவிழா

## பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

தனிப்பட்ட சில நபர்களைத் திருப்திப்படுத்துவனவாகவே யுத்த வெற்றிக் கொண்டாட்டங்கள் உள்ளன என்று முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகா எம்.பி. தெரிவித்துள்ளார்.

தனது மாமியாரின் மரணச் சடங்கில் கலந்துகொண்ட அவர் ஊடகவியலாளர் மத்தியில் பேசுகையில் , உண்மையில் இராணுவத்தை கௌரவிப்பதற்காக இந்த விழா எடுக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (6)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## இன்று எட்டாம் திருவிழா

### நல்லருள் தருவாய் நாகபூஷணியே!

அலைக்கரத்தால் கடலவளும்
அன்புடனே தாலாட்டும்
அழகுமிகு பதியதுவாம்
நயினா தீவினிலே
மலைமகளே அமர்ந்தாயே
மணி பல்லவத்துக் கோயிலிலே!
நிலை குலைந்த எங்களது
வாழ்வதனை நிமிர்த்திடவே
நாகபூஷணியே அருள்புரிவாய்
தொழுகின்றோம் உன்னடியே!

நாயன்மார்க்கட்டு ப.மகேந்திரதாசன்

### மலர் பாதம் தொழுகிறோம் மனமாற வாழவை

இடர் பல சுமந்து
இழந்து வந்தோம்
இனிய வாழ்வுதனை
தந்திடு தாயவளே!

அடிபட்ட மன மிது
அல்லலுற்று கேட்கிறது
நல்லவர்களுக்கு என்றும்
துணையாக நின்றிடம்மா

எட்டி அடி வைக்கையிலே
ஏமாற் றப் பொழுதுகள்
யாரை நம்பி நான்வாழ
உன் கருணை வேண்டுமம்மா

வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி

### நயினையூர் நாயகியே அருள்வாய்

நாகபூசணி அம்பாள் நயினையூர் ஆலயம்
தாகமதை தீர்க்க தாயருள் பகர்வாய்

தலம்நிறை தீபம் தருமழகு துலங்கும்
நலம்பல நாம்பெற நிதம்புகழ் ஆலயம்

கடலலை மேலெழ கடல்மடி ஏறி
திடமொடு உன்பதி துதித்திட வந்தோம்
அம்பிகை நீயே எம்விழி நீரினை
உம்கரம் நீட்டியே துயரினை தீர்ப்பாய்

அல்வையூர் கே.ஆர்.திருத்துவராஜா

### வேண்டுவோர் வேண்டியதை ஈந்திடுவாய்


நெய்தலால் முற்றஞ் சூழ்ந்துகுடி கொண்டு,
ஆதியு மந்தமுந்தன் பக்தர்க்கருள் தந்தாள்.
என்னக மனங்கனிந்தேன் தன்னகங் காத்து,
தன்னகப்புகழ் போற்றிப் பாடிட வைத்தாள்.

வில்வமரத்து நிழலின்கீழ்நின் றாயிரங்கண் கொண்டு,
நாகம்மாள் நயினைதீவிலே வீரமாய் உள்ளாள்.
வேண்டியோர் வேண்டிசைந்து வரங்களும் ஈந்து ,
தனைநம்பிநின் சான்றோர்க்கு பயனனைத்தும் அளித்தாள்.

இ.கேசவரூபன் , பருத்தித்துறை

கஜமுகன் ஹாட்வெயர்
இல.147,149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2833

# வெங்காயத்தில் பீடைகளும் அவற்றினது முகாமைத்துவமும்



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

11-I


வாருங்கள் எங்கள் உறவுகளே!

இனியொரு பசுமைப் புரட்சிக்கு... என்ற இந்தத் தொடரில் நெற்பீடைகளைப் பற்றியும் அவற்றினை முகாமைப்படுத்தலும் என்ற அத்தியாயத்தை விஞ்ஞானம், விவசாயம் கற்கும் மாணவர்களை நோக்கியதாகவே எழுதியிருந்தேன். நெற்பீடைகள் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பாடத்திலொரு அலகாக இருப்பதனாலும் நகரத்துக்கு உள்ளும் வெளியிலுமுள்ள உயர்தர மற்றும் நடுத்தர பாடசாலைகளிலுள்ள மாணவர்களின் அறிவுத் தேடலுக்கான பகுதியாக அதிலுள்ள தகவல்களை முடிந்தவரை விஞ்ஞானத்தில் குழைத்து ஆக்கியிருந்தேன். வலம்புரி தந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இன்னும் இதைப்பற்றி எழுதலாமே என நீட்ட இருந்த வேளை 'திடுதிப்' என மடலொன்று என் மேசையில் இருந்தது. மடலுக்குரியவர் இ.இராசேந்திரம். கம்பர்மலை எனும் ஊரைச் சேர்ந்தவர். நெல்லைப் பற்றியே எழுதுகிறீர்களே! வெங்காயப் பயிர்ச்செய்கையிலுள்ள பீடைகள் பற்றியும் எவ்வாறு முகாமைத்துவப் படுத்துவது என்பது பற்றியும் எழுதுங்களேன். வெங்காயச் செய்கையில் பீடைகளின் சேதத்தால் மிகவும் நஸ்டப்பட்டு விட்டேன். என விநயமாக எழுதியிருந்தார். தங்கள் கருத்துக்கு பணிவான நன்றி. பெரியவரே! மாணவர்களை மையப்படுத்துவதாக நினைத்துக் கொண்டு விஞ்ஞான பதங் களை தாராளமாகப் பயன்படுத்தியிருந்த போதும் விவசாயப் பெருமக்களனைவரும் வலம்புரியில் தவறாது வாசித்து பெரும் பயன்பெறும் பகுதி என்பதையும் கவனிக்கத் தவறிய எனது அறிவுப் புலமையை நொந்து கொள்கிறேன். ஆதலால் தொடர்ந்து வருகிறது வெங்காயச் செய்கையில் பீடைகளின் ஆதீக்கமும் அவற்றை இலகுவாக எவ்வாறு இனங்காண்பது என்பது பற்றியும் இன்னும் அவற்றை எவ்வாறு முகாமைத்துவப்படுத்துவது பற்றியுமான விளக்கங்கள். வாசித்து பயன்பெறும் அதே வேளையில் இத்தொடர் பற்றிய உங்கள் அபிப்பிராயங்களை வலம்புரிக்கு அல்லது எனக்கு எழுதுங்கள். அவை நிச்சயமாக எழுதும் கைகளுக்கும் எழுதுகோளுக்கும் புத்துணர்வை அள்ளித்தரும் என்பதில் ஐயமேதுமில்லை.

**வெங்காயத்தில் பீடைகளும்.......**

வெங்காயப் பயிர்ச்செய்கைக்கு தனித்துவமான இடமாக வடபகுதி விளங்குகிறது. அதுவும் யாழ்ப்பாணத்து சின்ன வெங்காயத்துக்கு தனி மதிப்பும் மவுசும் உண்டு.





எங்களூர் உறவுகளைப் போல காரசாமான பொருளிது. அநேகமாக வெங்காயமின்றி எந்தக் கறியுமிருக்காது. வெள்ளையுள்ளம் கொண்ட விவசாயப் பெருமக்களைப் போல உரிக்க உரிக்க வந்து கொண்டே இருக்கும். யாழ்ப்பாணத்து விவசாயிகள் வெங்காயப் பயிரை ஒரு பணப்பயிராக நோக்கியிருப்பதுடன் அவர்கள் வெங்காயத்தை பயிர் செய்வதில் பெரும் கில்லாடிகளும் கூட. இருந்தும் அவ்வப்போது அவர்கள் இட்ட முதலுக்கு நட்டமேற்படுத்த பல பீடைகள் தோன்றி மறைவதையும் காணக்கூடியதாயிருக்கின்றது.

நட்டு3-31/2 மாதங்களில் போட்ட முதலுக்கு பிழையில்லாது இலாபந்தரும் பயிராக இருப்பதுவே எங்களூர் விவசாயப் பெருமக்களை இதன்பால் என்றுமே நாட்டங் கொள்ள வைத்திருப்பதன் அதிசயமாகும். முடிந்தவரை வெங்காயத்தை சேதப்படுத்தும். அனைத்துப் பீடைகளையும் இக்கட்டு ரைத் தொடரில் விலாவாரியாக விஞ்ஞா னக் கலவை யையும் கலந்து குழைத்தெடுத்து தர முயலுகின்றேன். நிச்சயம் இத்தகவல் உங்களுக்கு பயன் தரும்.

**வெங்காயப் பயிர்ச்செய்கையில் பீடைகள்**

1.குமிழ் விலாங்குப் புழு(Bulb Nematode)
2.பனிப்பூச்சி (Thrips)
3.தாள் கோதிப்புழு
4.மடல் வெளிறல் நோய் (Blight)
5.குமிழ் அழுகல் நோய்(Bulb rot)
6. குமிழ் புழு (சேமிக்கும் போது ஏற்படுவது)

பொதுவாகவே வெங்காய பயிர்ச் செய்கைக்காக நிலத்தைத் தயார் செய்யும் போது வடமராட்சியில் பசுந்தாள் இலைகளை பயன்படுத்து வழமை. இதற்காக பூவரசு, எருக்கலை மற்றும் பன்னை இலைகளுடன் தற்போது கிளிசிறிடியாவையும் சேர்க்கத் தொடங்கிவிட்டார்கள். இவ் இலை வகைகளனைத்தும் வெறுமனே பசுந்தாள் உரம் என்பதற்காக இடப்படுவதில்லை. அதற்கும் மேலாக இவை பீடைகளைக் கட்டுப்படுத்தும் அல்லது அவற்றின் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும் திறனுடையவை என்பது பலருக்கு தெரியாது. பசுந்தாள் இலைகளை விளைநிலத்தினுள் சேர்த்து அவை உக்கும் போது வெளிவரும் பதார்த்தங்கள் நோய்கள் ஏற்படுத்தும் நுண்ணங்கிகள் மற்றும் விலாங்குப் புழு என்பவற்றின் பெருக்கத்தை கட்டுப் படுத்துவதோடு வெங்காயப் பயிரினுடைய உயிர்வேர் களான இளம் வேர் மயிர்களை அதிகம் உருவாக்க உதவி செய்யும். வெங்காயத்தின் தாள் உணவாக உட்கொள்ளப்பட்ட போதிலும் கேள்வி அதிகமான இக்கால கட்டத்தில் வெங்காயக் குமிழ்களையே அதிகம் பெற விவசாயிகள் விரும்புவார்கள். அதனால் விதை வெங்காயத்திலிருந்து அறுவடைசெய்து எடுக்கும் வெங்காய குமிழ்களுடன் கதை முடிந்துவிடாது கேள்வி அதிகமாகும் தருணத்தை எதிர்பார்த்தும் அடுத்தமுறை விதை வெங்காயத்திற்குமாக சேமித்து வைத்து நடுகை செய்யும் வரையான ஒரு வட்டத்திற்குள் பீடைகளால் ஆங்காங்கே சேதங்களேற் படுத்தப் பட்டு பாரியளவில் முதலை இழக்கும் நிலைக்கும் வந்து விடவும் வாய்ப்புண்டு. ஆதலால் இந்தப் பிரச்சினைகளை திட்டமிட்ட முறையில் பயிருக்கு பாதுகாப்பான முறையில் பயிர் செய்யும் போது இலகுவாகக் கையாள முடியும்.

**நட்ட விதை நல்ல விதையாக...**

விதை வெங்காயத்தை நடுகைக்காக தெரிவுசெய்யும் போது கவனமெடுப்பது மிக அவசியம். விதை வெங்காயம் நல்ல விதையாக இருக்க வேண்டும். விதைவெங்காயத்தை இன்னொருவரிடமிருந்து பெறும்போது அது விளையும் போது என்ன என்ன பீடைத் தாக்கத்திற்காளானது, அதற்காக என்ன முகாமைத்துவப்படுத்தும் செயற்படுகள் செய்யப்பட்டன என்ற விபரங்களை அறிந்து வாங்குவது நல்லது. வெறுமனே விதை வெங்காய குமிழ்கள் பெரிதாக வடிவாக இருக்கின்றது என்பதில் மட்டும் கவனத்தைச் செலுத்தாது அது சம்பந்தமாக அதை விளைவித்தபோது நடந்த பீடைபற்றிய செய்திகளையும் கேட்டுத் தெரிந்துகொள்வது என்றுமே நல்லது.ஏனெனில் குமிழ்களில சேதத்தை ஏற்படுதும் குமிழ் விலாங்குப்புழு, குமிழ் அழுகல் நோய் என்பன விதை வெங்காயத்தினூடாக பரவும் வாய்ப்பு அதிகமிருப்பதால் இதுபற்றி கவனத்தில் கொள்வது நல்லது.

---

## பொது மக்களிடமிருந்து எழுத்து மூலமான தகவல்களை கோருகிறது நல்லிணக்க ஆணைக்குழு

(கொழும்பு)

பொதுமக்கள் மற்றும் தனிப்பட்ட அமைப்புக்களிடமிருந்து எழுத்து மூலமான தகவல்களை வழங்குமாறு 'நல்லிணக்க ஆணைக்குழு' கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில் ஆரம்பத்தில் பொதுமக்களோ மற்றும் தனிப்பட்ட அமைப்புக்களோ எழுத்து மூலமான தகவல்களை வழங்க முடியும் எனக் கூறிய நல்லிணக்க ஆணைக் குழு, இதன் பின்னர் இவர்கள் வாய்மூல மான வாக்கு மூலத்தை வழங்க முடியும் எனவும் தெரிவித்தது.

மேற்படி பொதுமக்கள் மற்றும் தனிப்பட்ட அமைப்புக்கள் இரகசியமான முறையில் வாக்கு மூலம் அளிக்க விரும்பினால் அதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும் எனவும் நல்லிணக்க ஆணைக்குழு மேலும் கூறியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டிருக்கும் நல்லிணக்க ஆணைக் குழுவானது கடந்த 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி முதல் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி வரை இடம் பெற்றிருந்த நெருக்கடியான நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது.

கடந்தகால நெருக்கடியான நிலைமைகளை ஆராய்வதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவில் 8 பேரைக் கொண்ட குழுவினரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார். (6-4)

## சினிமா திரையரங்கு தீக்கிரையாக்கப்பட்டது

மட்டக்களப்பு நகரிலுள்ள சினிமாத் திரையரங்கமொன்றிற்கு நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்கள் தீ வைத்துள்ளனர்.

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியிலுள்ள சாந்தி திரையரங்கத்திற்கே இவ்வாறு தீ மூட்டப்பட்டது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

## தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(கொழும்பு)

தேசியப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிவர்த்தி செய்யும் வகையில் மாகாண பாடசாலை களில் இருந்து ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ஏற்கனவே அமுலில் இருந்த நிபந்தனைகளை தளர்த்துவதற்கும் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மாகாண பாடசாலைகளில் 5 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அதே போன்று நியமனக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கட்டாய காலத்தைப் பூர்த்தி செய்துள்ள மாகாணப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்குத் தேசிய பாடசாலைக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்கள் அந்தப் பாடசாலைகளில் குறைந்தது 3 ஆண்டு காலத்துக்குப் பணி புரிய வேண்டும் எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

அந்தந்த மாகாண சபைகளினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ஏற்கனவே இது தொடர்பில் பின்பற்றப்பட்டு வரும் ஒழுங்கு முறைகளுக்கு அமைவாகவும் இந்த ஆசிரியர் இடமாற்றங்கள் பின்பற்றப்பட வேண்டும் எனவும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (6)

# மட்டு. முருகன் ஆலய இராணுவமுகாமை அகற்றி வழிபாட்டிற்கு உதவ வேண்டும்

## அரியநேத்திரன் எம்.பி.கோரிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு தந்தாமலை முருகன் ஆலயத்தில் முகாமிட்டுள்ள பாதுகாப்பு தரப்பினரை ஆலயத்தை விட்டு வெளியேறுமாறும் இந்து அடியார்கள் சுதந்திரமாக முருகப் பெருமானை வழிபடுவதற்கு வழி செய்து தருமாறும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு தந்தாமலை முருகன் ஆலயத்தில் அடுத்தமாதம் நடைபெறள்ள வருடாந்தத் திருவிழாவை ஒட்டி நடைபெற்ற ஆலயத்தின் மகாசபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த ஆலயமானது இந்துக்களுக்கு மட்டுமே உரித்தானது என்றும் வேறெந்த மதத் தலங்களையும் இங்கு அமைப்பதற்கு அனுமதிக்கப்போவதில்லை என்பதையும் இங்குள்ள பாதுகாப்புத் தரப்பினர் ஆலயத்தை விட்டு வெளியேறி பரந்து விரிந்து கிடக்கின்ற நிலப் பரப்புக்களில் தங்களின் முகாமை அமைக்கலாம் எனவும் ஆலயத்தில் தான் தாங்கள் இருக்கவேண்டும் என்றால் மக்கள் எவ்வாறு சுதந்திரமாக வழிபட முடியும் எனவும் தான் இது தொடர்பான விடயத்தை பாராளுமன்றத்திலும் தெரிவித்ததாகவும் கூறினார்.

தந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய முன்றலில், ஆலய பரிபாலனசபை தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந்தக்கூட்டத்திற்கு, மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை உதவி பிரதேச செயலாளர், பிரதேச சபை பிரதி தவிசாளர், தந்தாமலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட இந்து ஆலயங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (6-4)

# ஷெல் காஸ் நிறுவனம் அரசுடமையாக்கப்பட்டது

(கொழும்பு)

ஷெல் காஸ் நிறுவனத்தின் சர்வதேச கொள்கைக்கு அமைவாக ஷெல் காஸ் நிறுவனம் அரசுடமையாக்கப்பட்டது என அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் போதே அவர் மேற்கண்ட முடிவை அறிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சர்வதேசக் கொள்கைக்கு அமைவாகவே ஷெல் காஸ் நிறுவனத்தின் 51 வீத பங்குகளையும் அரசாங்கம் பொறுப்பேற்று நிறுவனத்தை அரசுடமையாக்கிக் கொண்டதுடன் தனியார் மயப்படுத்தலை தடுத்து நிறுத்தும் முன்னேற்றத்தில் அடுத்த கட்டத்தை எட்டியுள்ளது.

அத்துடன் இலங்கை வங்கியின் நிதி பயன்பாடுகள் தொடர்பில் நிதியமைச்சு , பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, மின்சக்தி மற்றும் பெற்றோலிய வளத்துறை ஆகிய நான்கு அமைச்சுக்களே பேச்சு வார்த்தை நடத்தவிருக்கின்றது.

மாகாண மற்றும் தேசியப் பாடசாலைகளுக்கு 3 ஆயிரத்து 174 நடன ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் ஐந்து கிராமிய வீதிகளை புனரமைப்பதற்கும் நீர் விநியோகத் திட்டத்தை மேம்படுத்துவதற்கும் ஜப்பான் 6 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா நிதியுதவியை வழங்கவிருக்கின்றது.

கதிர்காமத்தில் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்கு 666 மில்லியன் ரூபா [illegible]துக்கப்பட்டுள்ளது.

கேகாலை, மாவனல்ல, ரம்புக்கனை ஆகிய பிரதேசங்களில் நீர் விநியோகத் திட்டத்தை மேம்படுத்துவதற்கு 145 மில்லியன் ரூபாவும் பெல்மதுளையில் 14 ஆயிரத்து 500 குடும்பங்கள் நன்மையடையும் வகையில் 384 மில்லியன் ரூபா செலவில் நீர் விநியோகத்திட்டமும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. (6)

# இலங்கையில ஈரவலயம் குறைந்து வருவதாக ஆய்வொன்று சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் ஈர வலயம் குறைந்து உலர் வலயம் அதிகரித்து வருவதாக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் ஈர வலையத்துக்குள் உலர் வலயம் உட்புகுந்து வருகின்றது என கொழும்பு பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை நடத்தியுள்ள ஆய்வில் தெரிய வந்துள்ளது.

புத்தளம், நீர்கொழும்பு மாத்தளை பதுளை நுவரெலியா அம்பாறை உட்பட பல இடங்களில் ஈர வலயம் குறைந்து வருவதாகவும் ஈர வலயம் குறைந்து வருவது பல வகையான தாக்கங்களை ஏற்படுத்தும் என கிழக்கு பல்கலைக்கழகத்தின் தாவரவியல் துறையின் மூத்த விரிவுரையாளர் டாக்டர் தங்கமுத்து ஜெயசிங்கம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல்லினத்தன்மை இதனால் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகும் எனவும் பல்லினத்தன்மை கூடிய பிரதேசமாக ஈர வலயப் பகுதியே சுற்றுச்சூழல் ஆர்வலர்களால் கருதப்படுவதாகவும் இலங்கைக்குரிய சில சிறப்பு வகையான தாவரங்களும் விலங்கினங்களும் மிகவும் அதிகமாக இந்த ஈரவலயப் பகுதியிலேயே இருக்கின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (6)


## "ஊடுருவும் உயிர்கொல்லி" காணொளி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

"ஊடுருவும் உயிர்கொல்லி" காணொளி வீச்சு வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சென் பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள அகவொளி குடும்ப வள நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் முன்னாள் நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் பிரதம விருந்தினராகவும், பொருளியற் கற்கை நெறிப் பேராசிரியர் ப.சிவநாதன் , பட்டப் பின் படிப்புகள் பீடாதிபதி ச.சத்தியசீலன் மற்றும் அருட் பணி எஸ். சிவயோகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6)

# இனுவை கந்தனின் மஹோற்சவம்



## மூன்றாம் திருவிழா

### வீதி வலம் வந்து அருள் கொடுப்பாய்

இனுவைப் பதிதனிலே உறைபவனே
இன்பமோடு வாழ்வுதரும் இறையவனே
தேவர்சிறை மீட்டு வந்த வேலவனே
எங்கள் குறை தீர்த்திடும்நற் காவலனே!

அழகுக் கந்தனாய்நீ அடியவர்க்கு
சங்காரம் செய்பவனாய் கொடியவர்க்கு
சக்திதரும் வேல்கைத் தடியுனக்கு
பக்தி செய்யும் பக்தரில் பிடிப்புனக்கு

சிங்கார வேலவனே சண்முகனே
ஓம்கார நாயகனே இனுவைநாதா
வேண்டிக் கரமெடுத்தோமுன் பதியினிலே
வீதியுலாவந்து நம்குறை தீர்ப்பாய்!

கொக்குவில் கலைநேசன்

### உலா வருகின்றான் கதிர்வேலன்

ஊரெங்கும் மணியோசையாய்
உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளமாய்
இனுவையிலே கந்தன் உலாவருகின்றான்
வறுமையின் பிடிபோக்கு – நல்
வாழ்வில் தீப ஒளி ஏற்றி
இனுவையிலே கந்தன் உலாவருகின்றான்
சந்தனத்தின் தென்றலிலே
அடியவர்கள் குறைதீர்த்து
இனுவையில் கதிர்வேலர் உலா வருகின்றான்

சுன்னாகம் ஜெயரூபன்

### அருள் மழை வேண்டிப் பாடுங்கள்

வண்ணத் தமிழ் தலைவனைப் பாடுங்கள்
வளநகர் இனுவைக் கந்தனைப் பாடுங்கள்
வரம்தர வீதியுலா வரும் வேலனைப் பாடுங்கள்
வருமிடர் தீர அருள்மழை பொழியப் பாடுங்கள்

(1709) கோண்டாவில் வரகவி

அனுசரணை :- 3 ஆம் திருவிழா உபயகாரர்

# மலேசிய முகாம்களிலுள்ள தமிழர்களை இலங்கைக்கு அழைத்து வரத் திட்டம்?

மலேசிய முகாம்களில் துன்பப்படும் 75 இலங்கை தமிழர்கள் 60 நாட்கள் முடிந்தும் இதுவரை எந்த முடிவும் எட்டப்படாமல் இருட்டறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தங்கள் கோரிக்கையாக எங்களை ஏற்றுக் கொள்ளும் உங்கள் நாட்டுக்கு அனுப்புங்கள் என்று உண்ணா விரதம் இருந்தும் பலன் கிடைக்கவில்லை. அதன் பின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று மலேசிய அரசு அறிவித்தது.

ஆனால் இதுவரை அதற்கான முயற்சிகள் எடுக்கவில்லை. நோர்வே, கனடா போன்ற நாடுகள் இவர்களை நீதிமன்றில் நிறுத்தி போலி முகவர்கள் மூலம் வந்தவர்கள் இல்லை என்று நிரூபிக்கப்பட்டால் ஏற்றுக்கொள்வ தாக அறிவித்தனர். ஆனால் இதுவரை நீதி மன்றத்துக்கும் அழைத்துச் செல்லப்படவில்லை.

இந்நிலையில் அவர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்துச் செல்வதற்கு இலங்கை அரசு முயற்சிகள் எடுத்து வருவதாக அறிந்து கொண்ட 75 இலங்கைத் தமிழர்களும் நாங்கள் இலங்கைக்கு செல்ல மாட்டோம். எங்களை இலங்கைக்கு அனுப்பாதீர்கள் என்று ஐ.நா.வின் அகதிகளுக்கான அதிகாரி களுக்கும் உலகலாவிய தமிழினத்துக்கும் கோரிக்கை விடுத்துள்ளனர். (6)

## பேச்சுமொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம்

(கரவெட்டி)

நீதிச் சேவை ஆணைக்குழுவினால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் எழுதுநராகக் கடமையாற்றிவந்த ந.திருக்குமரன் 14.06.2010 இல் இருந்து பேச்சு மொழிபெயர்ப்பாளராக தரம் 2இற்கு பதவி உயர்த்தப்பட்டு கடந்த 14.06.2010 பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவா முன்னிலையில் சத்தியப்பிரமாணம்செய்து தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (4-34)

# மின்சக்தி செலவைக் குறைக்க சீனா அதிரடி நடவடிக்கை

கடுமையான மின்பற்றாக்குறைப் பிரச்சினையால் திண்டாடி வரும் சீனா அதைத் தீர்ப்பதற்கு அதிகளவில் மின் சக்தியைப் பயன்படுத்தும் நிறுவனங்களின் உற்பத்தியை குறைப்பது குறித்தும் அந்நிறுவனங்களுக்கு மூடுவிழா வைப்பதும் குறித்தும் ஆலோசித்து வருகிறது.

சீனாவின் தென்மேற்கு மாநிலங்களான சிச்சுவான் குவான்ஜி போன்றவற்றில் மின்சாரப் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதேநேரம் நின்ஜியா, கிங்காய் மற்றும் ஜிங்ஜியாங் போன்ற வடமேற்கு மாநிலங்களில் மின்பற்றாக்குறை அதிகரித்து வருகிறது.

அதனால் மின் சக்தியைப் பெருமளவில் பயன்படுத்தும் நிறுவனங்கள் தங்கள் உற்பத்தியைக் குறைக்க வேண்டும் அல்லது இழுத்து மூட வேண்டும் என்ற யோசனையை அந்நாட்டு அரசு ஆலோசித்து வருகிறது.

இதுகுறித்து அந்நாட்டின் தேசிய மேம்பாடு மற்றும் மறுசீரமைப்புக் குழு துணைத் தலைவர் ஜியே ஜென்குவா கூறியதாவது,

மின்பற்றாக்குறையைச் சமாளிக்க மின்சக்தியை அதிகமாகப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் மின்விநியோகத்தைக் கட்டுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

மின்பற்றாக்குறையால் அவதிப்படும் பகுதிகளில் நிறுத்துவன மின் சக்திப் பயன் பாடு குறித்து கண்காணிக்க சிறப்புக் குழுக்கள் ஜுலையில் அமைக்கப்படும் என்று பெரிய நிறுவனங்களுக்கு வழக்கமாக அளிக்கப்படும் குறைந்த கட்டண விதிமுறைகளைக் கைவிடும் படி மாநில அரசுகளுக்கு குறைந்த கட்டண விதிமுறைகளைக் கைவிடும் படி மாநில அரசுகளுக்கு ஏற்கனவே உத்தரவிடப் பட்டுள்ளது.

இவ்வாறு ஜியே ஜென்குவா தெரிவித்தார். கடந்த 2005-2009 இல் சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜி.டி.பி) 14.38 சதவீதமாக சரிந்த பின் 2009 இன் முதல் காலாண்டில் மட்டும் 3.2 சதவீதமாக மின்தேவை அதிகரித்தது. இப்போது மின்சிக் கன நடவடிக்கையில் சீனா தீவிரமாக இறங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (6-4)

## மத்திய கிழக்கில் யுத்தம் ஏற்படக் கூடியசாத்தியம்

# சிரியா எச்சரிக்கை

(காஸா)

மத்திய கிழக்கில் யுத்தம் ஏற்படக் கூடிய சாத்தியங்கள் உருவாகியுள்ளதென சிரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் இஸ்ரேலிய படையினர் காஸா கடற்பரப்பில் பலஸ்தீனர்களுக்கு நிவாரணங்களை ஏற்றிச் சென்ற கப்பல் மீது நடத்திய தாக்குதலே இந்த பதற்ற நிலைக்கான காரணம் என சிரிய ஜனாதிபதி பஷர் அல் அஸாட் தெரிவித்துள்ளார்.

பிராந்திய யுத்தம் ஒன்று ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் சிரியா கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக குறிப்பிட்ட அவர்,

எவ்வாறெனினும் தற்போதைய இஸ்ரேல் அரசாங்கத்துடன் எந்த விதமான சமாதான பேச்சுவார்த்தைகளும் நடத்தப்படமாட்டாது என தெரிவித்துள்ளார். (6)

# மெக்ஸிக்கோ எண்ணெய் கசிவுக்கு 92 ஆயிரம் கோடி ரூபா இழப்பீடு

## பிரி. பெற்றோலிய நிறுவனம் வழங்கவுள்ளது

(வோஷிங்டன்)

மெக்சிக்கோ வளைகுடாவில் நிகழ்ந்துள்ள எண்ணெய்க் கசிவுக்கு ரூ.92 ஆயிரம் கோடி இழப்பீடு வழங்க பிரித்தானிய பெற்றோலிய நிறுவனம் முன்வந்துள்ளது.

பிரித்தானிய பெற்றோலிய நிறுவன அதிகாரிகளுடன் நடைபெற்ற கூட்டத்துக்கு பின்னர் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இத்தகவலை தெரிவித்துள்ளார் அவர் மேலும் கூறியதாவது;

தற்போதைய அமெரிக்க சட்டத்தின் படி இத்தகைய எண்ணெய்க் கசிவு விபத்து ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட நிறுவனம் ரூ.345 கோடி இழப்பீடு வழங்க வேண்டும் என்ற விதி உள்ளது.

ஆனால் இது மிகவும் குறைவான நிதி என்பது நாம் அனைவரும் அறிந்ததே. மெக்சிக்கோவில் தற்போது நிகழ்ந்துள்ள இந்த மிகப்பெரிய சுற்றுச்சூழல் சீர்கேட்டால் பொதுமக்களில் வணிகம் செய்வோர் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய இழப்புக்களை ஈடுசெய்யும் வகையில் ரூ.92 ஆயிரம் கோடி அளிக்க பிரித்தானிய பெற்றோலிய நிறுவனம் முன்வந்துள்ளதோடு இந்த முடிவுக்கு அமெரிக்க அரசியல் தலைவர்களும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இது பகுதிஅளவு இழப்பீடுதான் ஆனால் சேதங்கள் அதிகமாகும் பட்சத்தில் பாதிக்கப்படும் மக்களுக்கான முழு இழப்பீட்டையும் பிரித்தானிய பெற்றோலிய நிறுவனம் வழங்க வேண்டியிருக்கும் என அமெரிக்க நாடாளுமன்ற தலைவர் நான்சி பெலோசி வலியுறுத்திக் கூறியுள்ளார். (6-4)

# மியன்மாரில் பாரிய மண்சரிவு 46 பேர் பலி; பலர் காயம்

வடமேற்கு மியன்மாரில் அடை மழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவுகளில் சிக்கி, குறைந்தது 46 பேர் பலியானதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

பங்களாதேஷ் எல்லையில் வட ரஹினி மாநிலத்தில் இரு நாட்களாக பெய்து வந்த அடை மழை காரணமாக அடுத்து இந்த அனர்த்தம் இடம் பெற்றுள்ளதெனவும் மண்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் பணியிலும் மண்சரிவால் மூடப்பட்டுள்ள பிரதான வீதியொன்றை செப்பனிடும் நடவடிக்கையிலும் மீட்புப் பணியாளர்களும் படையினரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

மோங்டோ பிராந்தியத்தில் 28 பேரும் புதிடோங் பிராந்தியத்தில் 18 பேரும் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (6)




# கொலம்பியாவில் ஏற்பட்ட நிலக்கரி சுரங்க விபத்தில் 70 பேர் பலி;

கொலம்பியா நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் சிக்கி சுரங்கத் தொழிலாளிகள் 70 பேர் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி பலர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர். விபத்து நடந்த போது 72 பேர் பணியில் இருந்தனர் என்றும். இவர்களில் ஒருவர் மட்டும் 30 சதவீத தீக்காயங்களுடன் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார் என்றும் 17 பேரின் உடல்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் எஞ்சியவர்களும் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சுரங்கத்தின் வெளியில் விபத்தில் சிக்கியவர்களில் குடும்பத்தினர் கண்ணீர் மல்க காத்திருக்கின்றனர். (4-6)

# கிர்கிஸ்தான் இனக்கலவரத்தால் 3 இலட்சம் பேர் இடப்பெயர்வு

(கிர்கிஸ்தான்)

கிர்கிஸ்தான் உஸ்பெகிஸ்தானுக்கிடையில் இடம்பெற்றுவரும் இனக்கலவரம் காரணமாக இதுவரை 3 இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாக ஐ.நாவின் அகதிகளுக்கான ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பான தங்குமிட வசதிகள் இன்றி சுமார் 40 ஆயிரம் பேர் வரை அவதிப்படுவதாக ஐ.நா.வின் அகதிகளுக்கான உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

மோதலினால் இதுவரை 180 பேர் உயிரிழந்துள்ளதாகவும் ஆயிரத்து 900 பேர் வரை காயம் அடைந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஸ்தாபனம் மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் பல இம்மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி வருகின்றது. எனினும் இதுவரை ஒரு இலட்சம் பேருக்கு தங்குமிட வசதி வழங்கப்பட்டுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. (6-4)

# கனடா அருங்காட்சியகத்தில் மகாத்மா காந்தியின் சிலை

(டொரன்டோ)

வெண்கலத்தால் ஆன மகாத்மா காந்தி சிலை கனடா நாட்டின் வின்னிபெக்கிலுள்ள மனித உரிமைக்கான கனடா அருங்காட்சியகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இச்சிலையை கனடாவிற்கான இந்திய தூதர் சசிசேகர் கவாய் திறந்து வைத்து பேசுகையில் காந்தியின் அகிம்சை நெறிகள் நீதி போதனைகள் பேச்சு உலகத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் பொருந்தும் என்றும் மனித உரிமைக்கான காந்தியின் சிந்தனை நம்பிக்கை ஈடு இணையற்றது என்று கூறினார்.

2004 ஆம் ஆண்டில் இச்சிலையை இந்திய அரசாங்கம் கனடா அருங்காட்சியகத்துக்கு அன்பளிப்பாக வழங்கியது இச்சிலையை புகழ் பெற்ற சிலை வடிவமைப்பாளர் ராம் வாஞ்சி சுடோர் வடிவமைத்துள்ளார். இந்நிகழ்ச்சியில் கனடா வாழ் இந்திய மக்கள் ஏராளமானோர் பங்கேற்றனர். (6-4)

# பாகிஸ்தானுக்காக அணுஉலை தயாரிக்க சீனா இணக்கம்

(பீஜிங்)

பாகிஸ்தானுக்காக அணு உலை தயாரித்துத் தர சீனா முன்வந்துள்ளது. பாகிஸ்தானுடனான உறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக சீனா தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் இராணுவத் தலைமை தளபதி பர்வேஸ் கயானி தலைமையிலான அந்நாட்டு உயர் அதிகாரிகள் குழுவினர் சீனாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர். கயானி சீனப் பாதுகாப்புத்துறைத் அமைச்சர் லியாங் கயாங்லிக்கை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பு குறித்து சீன அதிகாரி கூறியதாவது,

சீனா- பாகிஸ்தான் இடையிலான இராணுவ ஒத்துழைப்பு சிறப்பாகவுள்ளதாகவும் அணுசக்தித் துறையில் பாகிஸ்தானுக்கு சீனா உதவ முன்வந்துள்ளதெனவும் பாகிஸ்தானுக்கு இரண்டு அணு உலைகளை சீனா தயாரித்து வழங்கும் என்றும் தெரிவித்தார்.

பாகிஸ்தானுடனான இராணுவ உறவு எதிர்காலத்தில் மேலும் வலுப்படுமென்றும் பாதுகாப்பு விடயங்களில் ஒத்துழைப்பு தர பாகிஸ்தான் முன்வந்துள்ளதாகவும் இரு தரப்பும் இணைந்து நவீன போர்விமானங்களைத் தயாரிக்கும் என்று சீன அமைச் சர் லியாங் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4)



மெக்ஸிக்கோ வளைகுடா கடலிலுள்ள எண்ணெய்க் கிணறுகளிலிருந்த விநியோக எண்ணெய் குழாய்களில் ஏற்பட்ட கசிவினால் கடலில் பரவிய எண்ணெய் தீப்பிடித்து பல மைல் தூரத்திற்கு பரவி கரும்புகையுடன் கொழுத்துவிட்டெரிவதை படத்தில் காணலாம்.

இதற்கு முன்பு நாம் என்ன நினைத்தோமோ, அப்படித்தான் இப்போது நாம் அனைவரும் இருக்கின்றோம் ~ *கௌதம புத்தர்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## யுத்தத்தில் தோற்றவர்களை விட வென்றவர்களுக்கே துக்கம் அதிகம்

யுத்தத்தில் தோற்றவர்களை விட வென்றவர்களுக்கே அதிக துக்கம் என்பது கௌதம புத்த பிரானின் வாக்கு.

இந்த வாக்கின் நிஜத்தை இந்த நாடு விரைவில் அனுபவிக்கப்போவதாக சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் எச்சரித்திருக்கிறார்.

இந்த எச்சரிக்கை எதனையும் இலங்கை அரசு கவனத்தில் கொள்ளவில்லை.

எனினும் நேற்றையதினம் கொழும்பில் நடத்தப்பட்ட யுத்த வெற்றியின் ஓராண்டு விழா, இலங்கை மக்களின் முழுமையான ஆதரவுக்குட்படவில்லை என்பதை உணரவேண்டும்.

இலங்கை என்ற இந்த அழகிய நாட்டை இங்கு வாழ்கின்ற அத்தனை மக்களினதும் உரிமைக்குரியதாக ஆக்குகின்றபோதுதான் அமைதி, சமாதானம் என்ற உயரிய இலக்குகளை நாடு அடைய முடியும்.

இதைவிடுத்து, வெற்றிவிழாக் கொண்டாடுவதன் மூலமாகவோ அல்லது இனம்சார் எழுச்சியைத் தூண்டுவதன் மூலமாகவோ இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்த முடியாது.

இந்த உண்மைகள் உணரப்பட வேண்டியதாக இருந்தாலும் துரதிர்ஷ்டவசமாக அதுபற்றிச் சிந்திப்பதில் பெரும்பான்மை இனம் தவறிழைத்து விடுகிறது .

வன்னியில் நடந்த மிகப்பெரும் கொடூர யுத்தத்தில் தங்கள் உறவுகளை பறிகொடுத்து விட்டு சதா கண்ணீர்விடும் பல்லாயிரக்கணக்கான மக்களின் துயர் ஒருபுறம். குடியிருப்பதற்கு வீடில்லை. அடிப்படை வசதிகள் ஏதுமில்லை. சிறுகுடிசையில் வாழும் பரிதாபம் மறுபுறம் என்ற பெரும் கொடுமையில் தமிழ் மக்கள் தவியாய்த் தவிக்கின்ற போது, கொழும்பில் நடந்த வெற்றிவிழா எதனைக் குறித்து நிற்கிறது?

இத்தகைய கேள்வியை யாரேனும் கேட்பார்களாயின், இலங்கை சிங்கள மக்களின் நாடு என்பதை அரசு மீண்டும் ஒருமுறை ஞாபகப்படுத்துகிறது என்பதே பதிலாக அமையும்.

ஒரு நாடு போர்வெற்றியைக் கொண்டாடுகின்றதெனில் அந்த வெற்றியில் அனைத்து மக்களும் இணையவேண்டும். இதைவிடுத்து ஒரு இனத்தின் வெற்றியாக அது கொண்டாடப்படுமாயின் அந்த நாட்டின் ஜனநாயகம் என்பது துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றதென்பதே பொருளாகும்.

எதுவாயினும் இலங்கை அரசு போர்வெற்றி என்பதை மாற்றி இனப்பிரச்சினைக்கு நியாயமானதும், நிரந்தரமானதுமான தீர்வை அடைந்த பின் சமாதானத்தின் வெற்றியாகக் கொண்டாடி இருக்குமாயின், அடடா! இதுவல்லவோ அரசு என்று நாட்டின் எல்லா மக்களும் புகழ்ந்து பேசியிருப்பர்.

இதுவே உண்மையான வெற்றியுமாக இருக்கும். ஆக இதற்கான பாதையை நோக்கி அரசு விரைவாகப் பயணிக்கவேண்டும்.

அந்தப் பயணத்திற்கான மகுட வாசகமாக "தோற்றவர்களை விட வென்றவர்களுக்கே அதிக துக்கம்" என்ற புத்தபிரானின் வாக்கு அமையட்டும்.

# ஆன்ம ஈடேற்றம் தரும் ஆனி உத்தர தரிசனம்

இன்று ஆனி உத்தர விரத நன்னாள் - பரங்கருணைத் தடங்கடலாக விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானுக்குரிய விரதங்களுள் இது தனிச்சிறப்பு வாய்ந்தது. இவ்விரதம் அனுட்டிப்பவர்கள் அதிகாலையில் எழுந்து நீராடி சந்தியாவந்தனம் முடித்து , சிவாலய தரிசனம் செய்து, இன்று முழு நாளும் சிவ சிந்தனையுடனிருந்து, தேவார திருவாசகங்களை ஓதி, இயன்ற தான தர்மங்களைச் செய்து மதியம் ஒரு பொழுதுண்டு உண்ணும் போது இன்னொரு சிவனடியாருக்கும் அமுதளித்து ஆசாரசீலர்களாக இருத்தல் வேண்டும்.

'கோயில்' என்று சிறப்பாகச் கருதப்படும் சிதம்பரத்திலே இந்த ஆனி உத்தரம் வெகுவிமர்சையாக நடைபெறும். அதிகாலை வேளையிலேயே அடியார் பெருமக்கள் கூட்டம் கூட்டமாக இங்கே அலைமோத ஆரம்பித்து விடும். சிற்றம்பலத்தாடும் கனகசபையின் பொன்னம்பலத்திலே நடராஜனாக தில்லைச் சிதம்பர தரிசனம் கொடுப்பார். அந்த அற்புதக் காட்சியைக் காண்பதற்கு அடியவர்கள் நான்முந்தி நீமுந்தி என்று போட்டி போட்டுக் கொண்டு முண்டியடிப்பார்கள்.

சிதம்பர நடராஜரோ சிவகாமி அம்பாள் சமேதராக ஆடி ஆடி அசைந்து வரும் கோலாகலமான ஆனந்த நடமிடும் அற்புத தரிசனம் காணக் கண் கோடி வேண்டும்.

எமது ஈழநாட்டிலே காரைநகரிலே அமைந்திருக்கின்ற ஈழத்துச் சிதம்பரம் எனப்படும் சிவன் கோயிலிலும் நல்லூர் சிவன் ஆலயத்திலும் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்திலும் இந்த அதியற்புத ஆனந்த தரிசனத்தைக் கண்டுகளிக்கலாம்.

இன்றைய ஆனி உத்தர தரிசனம் காண்பதற்கும் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். **''இனித்த முடைய எடுத்த பொற்பாத தரிசனங்காண மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே''** என்பது அப்பர் திருவாக்கு.

ஆகவே இன்று அடியவர்களாகிய நாம் அனைவரும் பொன்னம்பலத்தாடும் பெருமானின் திவ்ய தரிசனம் பெற்று இப்பூவுலகில் அவனருளாலே அவன்தான் வணங்கி ஆன்ம ஈடேற்றம் பெற எல்லாம் வல்ல அவனருளையே நாடி சிந்தித்து வந்தித்துச் சேவித்து நிற்போமாக.

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

# யாழிற்கு வரும் பொருட்களில் தமிழில் விளக்கம் எழுத வேண்டும்

## யாழ்.வணிகர் கழகம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்படும் உணவுப் பொருட்கள், மருந்து பொருட்களில் தமிழ்மொழியில் விளக்கங்கள் பொறிக்கப்பட்டிருக்க வேண்டுமென விற்பனையாளர்களி டம் யாழ்ப்பாண வணிகர் கழகம் கேட்டுள்ளது.

இத தொடர்பில் யாழ்ப்பாண வணிகர் கழகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அதன் நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்பட்டதாவது,

யாழ்ப்பாணத்திற்கு தென்னிலங்கையிலிருந்து எடுத்து வரப்படும் உற்பத்திப்பொருட்கள் மற்றும் இறக்குமதிப் பொருட்கள் பெரும்பாலானவை ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளிலேயே விளக்கங்கள் பொறிக்கப்பட்டுள்ளது.

இதனால் பொருட்கள் தொடர்பான விளக்கங்கள், முடிபுத் திகதி, உற்பத்தி, பயன்படுத்தும் முறைகள் என்பவற்றை பூரணமாக அறிந்து கொள்ள முடியவில்லை.

அத்துடன் பல பொருட்களின் விளக்கங்கள் புரியாமையினால் பாவனையாளர்கள் அவற்றை நாடுவதில்லை.

எனவே யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்படும் உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்களில் தமிழ் மொழியில் விளக்கங்களை பொறித்துக் கொள்ளுமாறு உற்பத்தியாளர்கள், விற்பனை முகவர்கள், விற்பனைப் பிரதிநிதிகளிடம் கேட்கப்படுகின்றது.

அத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிலங்கைக்கு கொண்டு செல்லப்படும் பொருட்களை அங்குள்ள மக்களுக்கு புரியக் கூடிய வகையில் விளக்கங்களை பொறிக்குமாறு யாழ். உற்பத்தியாளர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

இதேவேளை மேற்படி விடயம் தொடர்பில் தென்னிலங்கையிலுள்ள கொழும்பு வர்த்தக சம்மேளனம், இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் உட்பட்டவற்றிடம் தெரியப்படுத்தியுள்ளோம். அவர்கள் சாதகமான பதிலை அனுப்பி வைத்துள்ளனர் என யாழ்ப்பாண வணிகர் கழகத்தினர் தெரிவித்தனர். (ந-5)

# காசோலை மோசடி செய்தவருக்கு ஒத்திவைக்கப்பட்ட கடூழியச் சிறை

(கொழும்பு)

இன்னொருவருடைய பயணக் காசோலையை தன்னுடைய காசோலை எனக் கூறி, கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளையில் அதனை மோசடியாக மாற்றிய சம்பவம் தொடர்பாக குற்றத்தை ஏற்றுக் கொண்ட நபருக்கு நீர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சிரோன் குணரத்ன ஏழுவருட காலம் ஒத்தி வைக் கப்பட்ட இரு வருட கடூழியச் சிறைத் தண்டனையும் 15 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

கொழும்பு 9 தெமட்டகொட பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய நபர் ஒருவருக்கே மேற்படி சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டது.

28.01.1990 அன்று கட்டுநாயக்க சர்வ தேச விமான நிலையத்தில் 15 ஆயிரத்து 896 ரூபா காசோலையை மோசடியான முறையில் மாற்றியதாக பிரதிவாதி மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

பிரதிவாதி 20 வருடங்களின் பின்னர் குற்றத்தை ஏற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (6)

# திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்தியத்தில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 30 ஆண்டுகள் நிறைவு பெற்றதை முன்னிட்டு எதிர்வரும் 23,24 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பிராந்திய நிலையத்தில் திறந்த பல்கலைக்கழக தினம் கொண்டாடப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு விஞ்ஞானத் தகவல் தொழில்நுட்பத் துறையில் கல்விக் கண்காட்சியும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் மற்றும் பாடசாலை மாணவர்களிடையே போட்டிகளையும் நடத்தவுள்ளதாக இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை திறந்த பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான பீடத்தினால் நட த்தப்படும் இரசாயனவியலுக்கான கணித பாட நாட்பாடசாலை இன்று நடைபெற மாட்டாது என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ந-3)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

அவசர திருத்த வேலைகள் காரணமாக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை இணுவில், உடுவில், மரு தனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி,யாழ்நகரம், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப் பாய், சங்குவேலி, கோண்டாவில் ஆகிய பிரதேசங்களில் மின்தடைப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பருத்தித்துறை பிரதான வீதி அகலமாக்கும் பணிகளுக்காக மின்விநியோக தூண்களை இட மாற்றம் செய்யவேண்டியுள்ளதால் அன்றைய தினம் புன்னாலைக் கட்டுவன்,அச்செழு,புத்தூர்,அச்சு வேலி,ஆவரங்கால், இடைக்காடு மற்றும் வடமராட்சி பிரதேசம் முழுவதும் மின்விநியோகம் தடைப்படும் என சுன்னாகம் மின்பொறியியளார் காரி யாலயம் அறிவித்துள்ளது. (6-4)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## வாழ்க்கை



சுற்றிலுமுள்ள நிழல்கள் இருள இருள, இறுதிநிலைகள் நெருங்க நெருங்க, வாழ்க்கையின் உண்மையான பொருளை, அதாவது வாழ்க்கை ஒரு கனவு என்பதை ஒருவன் உணரத் தொடங்குகிறான்.

வாழ்க்கை என்பது போர்கள், தவறுகள், திருத்தங்கள் இவற்றின் ஒரு தொடர் வாழ்க்கையின் இரகசியம் பலவகை அனுபவங்களிலிருந்து அறிவு பெறுவதே; போகமல்ல ஆனால் அந்தோ, உண்மையான அறிவு கிடைக்கத் தொடங்கும் போது நமக்கு மறுவுலகிலிருந்து அழைப்பு வந்துவிடுகிறது.

# மக்களுக்கு எதிரான செயல்களில் ஈழத்தமிழர் ஆதரவாளர்கள் ஈடுபடமாட்டார்கள்



## பழ.நெடுமாறன் தெரிவிப்பு

(சென்னை) ஈழத்தமிழர்களின் ஆதரவாளர்கள் ஒருபோதும் மக்களுக்கு எதிரான செயல்களில் ஈடுபடமாட்டார்கள் என்று மக்கள் உரிமைக் கூட்டமைப்பு அமைப்பாளர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் அருகே ரயில் தண்டவாளம் வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட சம்பவத்தையொட்டி தமிழர் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த 10 இளைஞர்களை தமிழக பொலிஸார் கைதுசெய்தனர்.

இதுகுறித்து மக்கள் உரிமைக் கூட்டமைப்பு அமைப்பாளர் பழ.நெடுமாறன் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, விழுப்புரம் அருகே ரயில் தண்டவாளம் வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட சம்பவத்தையொட்டி தமிழர் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த 10 இளைஞர்களை தமிழகப் பொலிஸார் கைது செய்து, 4 நாட்களாக விசாரணை என்ற பெயரால் மறைத்து வைத்து, சட்டவிரோதமாக நடந்து கொண்டதை உயர்நீதிமன்றம் கடுமையாகக் கண்டித்துள்ளது.

விழுப்புரம் குண்டுவெடிப்பு சம்பவத்தில் பொலிஸ் உயர் அதிகாரிகள் வெளியிட்ட செய்திகள் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளது எனவும் ஈழத்தமிழர்களின் ஆதரவாளர்கள் ஒருபோதும் மக்களுக்கு எதிரான செயல்களில் ஈடுபமாட்டார்கள் எனவும் அவர்கள் மக்களுக்காகப் போராடுபவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக மீண்டும் வளர்ந்துவரும் எழுச்சியைத் தடுத்து ஈழ ஆதரவாளர்களின் மீது கடும் ஒடுக்குமுறையை ஏவி விடுவதற்கு வகுக்கப்பட்ட திட்டம் தான் இந்த குண்டுவெடிப்பு சம்பவம். இதுபோன்ற செயல்களால் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான எழுச்சியை ஒருபோதும் தடுத்துவிட முடியாது என்பதை தமிழக முதல்வர் கருணாநிதி உணரவேண்டும். பெரு நெருப்பு என வளர்ந்துவரும் தமிழர் எழுச்சியை அணைக்க முயற்சிப்பவர்கள் யாராக இருந்தாலும் பொசுங்கிப் போவார்கள் என எச்சரித்துள்ளார். (6-4)




# மிகப் பெரிய திருக்குறள் புத்தகம்



(சென்னை)

வி.ஜி.பி.சகோதரர்கள் தயாரித்த மிகப்பெரிய திருக்குறள் புத்தகம் செம்மொழி மாநாட்டில் வைத்து முதல்வர் கருணாநிதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

இது குறித்து வி.ஜி.பி உலகத் தமிழ்ச் சங்கத் தலைவர் வி.ஜி சந்தோசம் தெரிவிக்கையில்,

உலக செம்மொழி மாநாட்டை நடத்தும் முதல் அமைச்சர் கருணாநிதியின் தமிழ்த் தொண்டைப் பாராட்டும் வகையில் ஏதாவது செய்ய வேண்டும் என்று ஆராய்ந்து பார்த்தோம். வி.ஜி.பி. உலக தமிழ் சங்கம் சார்பில் 6 அடி உயரமும் 3 அடி அகலமும் ஒரு தொன் எடையும் கொண்ட மிகப் பெரிய திருக்குறள் புத்தகத்தை வழங்குவது என்று முடிவு செய்தோம். இந்த புத்தகத்தில் 133 அதிகாரங்கள் 1330 திருக்குறள்கள் அச்சிடப்பட்டுள்ளன. இந்தப் புத்தகத்தை 40 பேர் கொண்ட குழுவினர் ஒரு மாதமாக தயாரித்தனர்.

இந்தப் புத்தகம் கோவை செம்மொழி மாநாட்டில் முதல்அமைச்சர் கருணாநிதியிடம் பரிசாக வழங்கப்படவுள்ளது. கோவை செம்மொழி மாநாட்டின் சிறப்பு புத்தக கண்காட்சி அரங்கில் இந்த புத்தகம் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படவுள்ளது. செம்மொழி மாநாடு முடிந்ததும் சென்னை பல்கலை வளாகத்தில் மிகப் பெரிய அளவில் உருவாக்கப்பட்டு வரும் அண்ணா பொது நூலகத்தில் நிரந்தரமாக வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளோம். இவ்வாறு வி.ஜி.சந்தோசம் தெரிவித்தார். (6-4)

# மணிக்கு ஒருமுறை திருக்குறள் சொல்லும் மணிக்கூண்டு

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி சென்னை பல்கலைக்கழகத்தின் மணிக்கூண்டில் திருக்குறள் ஒலிக்கச் செய்யும் புதிய முறை தொடங்கப்பட்டுள்ளது. தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி இந்த சேவையை ஆரம்பித்து வைத்தார்.

அப்போது பேசிய அவர் சென்னை பல்கலைக்கழகத்தின் மணிக்கூண்டில் ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை என்று நாள் தோறும் 24 திருக்குறள்கள் பொருளுடன் ஒலிக்கும். இதில் 1330 குறள்களும் விளக்கங்களுடன் பதிவு செய்யப்பட்டுள்ளன. திருக்குறள் மீது மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்த புதிய முறை கொண்டு வரப்பட்டுள்ளது என்றார். (6)

# இலங்கையில் ராவணன் படத்தை வெளியிட பலத்த எதிர்ப்பு

மணிரத்னம் இயக்கத்தில் உருவான ராவணன் படத்தை வெளியிட இலங்கையில் பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

கொழும்பில் சர்வதேச இந்திய திரைப்பட விருது வழங்கும் விழா இம்மாதம் நடைபெற்றது. இந்த விழாவில் பங்கேற்கக் கூடாது என்று தமிழகத்தில் உள்ள தமிழர் அமைப்புக்கள் போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்தின் எதிரொலியாக பிரபல நடச்சத்திரங்களான அமிதாப்பச்சன் , அபிசேஷக் பச்சன், ஜஸ்வர்யாராய், ரஜினி, கமல் உள்ளிட்ட தமிழக நட்சத்திரங்கள் முற்றிலும் இலங்கைப் பயணத்தை தவிர்த்தனர்.

இலங்கையில் நடைபெறவுள்ள இந்தியத் திரைப்பட விழாவில் மணிரத்தினம் இயற்றிய ராவணன் படம் திரையிடப்படுவதாக செய்திகள் வெளியானது.இதையடுத்து அப்பாவித் தமிழர்களை கொன்றுகுவித்த இலங்கையில் நடைபெறும் விழாவில் ராவணன் படத்தை திரையிட வேண்டாம். அந்த விழாவுக்கு மணிரத்தினம் செல்லாமல் புறக்கணிக்க வேண்டும் என்று பல்வேறு தமிழ் அமைப்புக்கள் கோரிக்கை வைத்தன.

இந்நிலையில் இலங்கை விழாவில் ராவணன் படம் திரையிடப்படாது என்றும் தானும் இலங்கை செல்லப்போவதில்லை என்றும் இயக்குனர் மணிரத்னம் அறிவித்தார்.

தமிழர்களின் கடும் எதிர்ப்பை தாண்டி இலங்கைத் தலைநகர் கொழும்பில் இந்திய சர்வதேச திரைப்படக்கழகமும் இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பும் இணைந்து நடத்திய ஐபா விருது வழங்கும் விழாவும் அதனைத் தொடர்ந்து நடந்த வணிக ரீதியிலான மாநாடும் பெரும் தோல்வியில் முடிந்தது.இதனால் இலங்கை அரசுக்கு பல கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

இந்நிலையில் தமிழ், இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளில் நேற்று உலகம் முழுவதும் ராவணன் படம் வெளியானது. இந்நிலையில் மட்டக்களப்பு பகுதியில் உள்ள சாந்தி திரையரங்கில் ராவணன் படம் வெளியானது.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து சிலர் அந்த திரையரங்கின் திரையை கிழித்து கொளுத்தியுள்ளனர். படம் பார்க்க வந்தவர்கள் அடித்து விரட்டப்பட்டுள்ளனர். (6-4)

# சென்னையில் வழக்கறிஞர்கள் இரண்டாவது நாளாக உண்ணாவிரதம்

உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக் காடும் மொழியாக அறிவிக்க வலியுறுத்தி சென்னையில் வழக்கறிஞர்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் உண்ணா விரதத்தை மேற்கொண்டனர். உண்ணாவிரதம் இருந்த வழக்கறிஞர்களை தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, பா.ஜ.க.தலைவர் பொன். இராதா கிருஷ்ணன் , இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலர் தா. பாண்டியன் ஆகியோர் நேரில் சந்தித்தனர்.

தமிழை வழக்காடும் மொழியாக ஆக்குவது குறித்து மத்திய அரசிடமும் பிரதமரிடமும் பேசுவதாக கூறி வழக்கறிஞர்களின் உண்ணாவிரதத்தை கைவிட வேண்டும் என தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு வலியுறுத்தினார்.

எனினும் வழக்கறிஞர்கள் அதை ஏற்க மறுத்து உண்ணாவிரதத்தை தொடர்ந் தனர்.

தமிழை வழக்காடும் மொழியாக அறிவிக் கும் வரை உண்ணாவிரதம் தொடரும் என அவர்கள் தெரிவித்தனர்.

வழக்கறிஞர்களின் உண்ணாவிரதத்திற்கு பழ. நெடுமாறன் , பா.ஜ. க தலைவர் பொன்.இராதாகிருஷ்ணன் உள் ளிட்டோர் ஆதரவு தெரிவித்தனர். (6)

# மகாராஷ்டிராவில் கடும் மழைக்கு 46 பேர் பலியாகியுள்ளனர்

(புதுடில்லி)

மகாரஷ்டிரா மாநிலத்தில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக அப்பகுதியில் 46 பேர் பலியாகியுள்ளதாக அம்மாநில துணை முதல்வர் சகன் புஜ்பால் தெரிவித்தார். மேலும் அப்பகுதி வீதியெங்கும் மழைநீர் வெள்ளமாக தேங்கி நிற்பதால் போக்குவரத் பாதிப்படைந்துள்ளதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது.

மராட்டிய மாநிலமெங்கும் பருவமழை தீவிரம் அடையத் தொடங்கியுள்ளது. தண்ணீர் பற்றாக்குறையினால் தவித்து வந்த மும்பை மாநகரிலும் புறநகர்களிலும் பூமியும் மக்கள் மனம் குளிரும் வகையில் தொடர்ந்து பருவமழை பெய்து வருகிறது.

தற்போது மும்பை நகரில் 60.77 மி.மீ. மழை பெய்துள்ளது.அதிகபட்சமாக கொலபாவில் 78.6 மி.மீ. மழை பதிவாகி உள்ளது. புறநகர்களில் சாந்தா குரூசில் 95 மி.மீ. மழை பெய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தாதர், காட்பரி சந்திப்பு, ஹிந்த் மாதா உள்ளிட்ட பல பகுதிகளில் மழைத்தண்ணீர் வெள்ளமென தேங்கியுள்ளது. வீதிகளில் தண்ணீர் வெள்ளமென பெருக்கெடுத்து ஓடியது. இதனால் வாகனங்கள் ஊர்ந்து சென்றன.

இந்நிலையில் மும்பையை அடுத்த தானேயில் தியானேஷ்வர் நகர் பகுதியில் கடந்த புதன்கிழமையன்று 80 அடி நீள எல்லைச் சுவர், அந்த பகுதியில் அமைந்துள்ள குடிசைகள் மீது இடிந்து விழுந்ததினால் 8 பேர் பலியானதுடன் 4பேர் பலத்த காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த புதன்கிழமையன்று அதிகாலை வேளையில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து அப்பகுதியில் வசித்து வரும் மக்கள் கூறுகையில், இந்த சுவற்றின் மறுபுறத்தில் ஏராளமான மணலை கட்டுமான நிறுவனம் மலை போல குவித்து விட்டிருந்தது. கடந்த மூன்று நாட்களாக பலத்த மழை பெய்ததால் இந்த சுவர் இடிந்து விழுந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது என்று கூறினர்.

மேலும் பலத்தமழை காரணமாக மும்பை முல்லுண்டு எல்.பி.எஸ். மார்க்கில் ஒருசுவர் இடிந்து விழுந்ததில் ஒருவர் இறந்துவிட்டார். இதனால் ஒரே நாளில் மும்பை பகுதியில் மழையினால் பலியானவர்களின் எண்ணிக்கை 9 ஆகவுள்ளது.

மும்பையில் மாநில அரசின் தலைமைச் செயலகமான மந்திராலயாவில் துணை முதலமைச்சர் சாகன் புஜ்பால் நேற்று முன் தினம் நிருபர்களை சந்தித்தபோது, அவர் கூறுகையில், மாநிலத்தில் பலத்த மழை காரணமாக இதுவரை 46 பேர் உயிரிழந்துள்ளனர்.

பலியானவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. ஒரு இலட்சம் இழப்பீடு வழங்கப்படுமென்றும் படுகாயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் ரூபாவும் காய மடைந்தோருக்கு தலா 25ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் எனவும் புஜ்பால் தெரிவித்துள்ளார். (6)

# மீண்டும் சர்ச்சைக்குள் நித்தியானந்தா

(சென்னை)

தமிழகத்தின் சர்ச்சைக்குரிய சாமியார் நித்தியானந்தா மீண்டும் ஒரு சர்ச்சைக்குள் சிக்கியுள்ளார். அவர் தனது தியான வகுப்புக்களில் சுயதண்டனை அல்லது சுய புனிதப்படுத்தும் நட்வடிக்கைகளுக்காக ஏழைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்ற மண்ணெண்ணையைப் பயன்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஏழைகளுக்காக அரசாங்கத்தினால் விநியோகப்படுகின்ற மண்ணெண்ணைத் தொகுதி ஒன்று அவரது ஆச்சிரமத்திலிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கப்படுகின்றன.

ஏற்கனவே அவர் மீது பாலியல் தொடர்பான முறைப்பாடுகள் சுமத்தப்பட்டு 53 நாட்கள் சிறைவைக்கப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில் அவர் மீது மீண்டும் இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவருக்கு 7 1/2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (6)

# சைனிகயிட்டா உதைத்தார் நைஜீரியா அவுட்; கிரீஸ் வெயிட்

(புளுயம்பான்டைன்)

நைஜீரிய வீரர் சைனிகயிட்டா, கிரீஸ் வீரரை காலால் உதைத்ததால் சிவப்பு அட்டை பெற்று வெளியேற்றப்பட்டார். 10 வீரர்களுடன் ஆடிய நைஜீரியா அணி 1–2 என்ற கோல் கணக்கில் கிரீஸ் அணியிடம் தோல்வியுடைந்தது தொடரிலிருந்து வெளியேறியது.

உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடரில் நேற்று முன்தினம் புளுயம்பான்டைன் நகரில் நடந்த பி பிரிவு ஆட்டத்தில் நைஜீரியா, கிரீஸ் அணியை எதிர் கொண்டது.

ஏற்கனவே நடந்த முதல் போட்டியில் இந்த இரு அணிகளும் தோல்வி கண்டிருந்தன. இந்த போட்டியில் வெற்றி பெற்றால் மட்டுமே அடுத்த சுற்று பற்றி யோசிக்க முடியும் என்ற நிலையில் களமிறங்கின.

எனவே ஆரம்பமுதலே ஆட்டத்தில் அனல் பறந்தது. ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் நைஜீரியா முதல் கோல் அடித்தது. அந்த அணி வீரர் காலு உட்சி அடித்த பிரீ கிக் கிரீஸ் கோல் காப்பாளரை ஏமாற்றி வலைக்குள் தஞ்சம் புகுந்தது.

கோல் வாங்கிய கிரீஸ் வீரர்கள் பதில் கோல் அடிக்கும் முனைப்புடன் போராடினார்கள். போராட்டம் சண்டையில் முடிந்தது. 33 ஆவது நிமிடத்தில் நைஜீரிய வீரர் சைனிகயிட்டாவுக்கு கிரீஸ் வீரர் டோராசிடிஸ்கும் மைதானத்தில் தகராறு ஏற்பட்டது.

இதில் ஆத்திரமடைந்த சைனிகயிட்டா அவரை காலால் உதைத்தார். இதனால் நடுவர் சைனிகயிட்டாவுக்கு எந்த பாரபட்சமும் காட்டாமல் நேரடி சிவப்பு அட்டை காட்டினார்.

ஆத்திரத்தில் செய்த தவறால் நொந்து போன சைனிக்கயிட்டா தலையை தொங்க போட்டவாறே களத்தை விட்டு வெளியேற கிரீஸ் விளையாடத் தொடங்கியது.

தொடர்ந்து நைஜீரியா 10 வீரர்களுடன் விளையாடியது. இது கிரீஸ் வீரர்களுக்கு சாதகமாக அமைந்தது. தொடர்ந்து 43ஆவது நிமிடத்தில் கிரீஸ் பதில் கோல் திருப்பியது. டோராசிடிஸ் கொடுத்த பாஸை பெற்ற சல்பிங்திஸ் அதனை கோலாக மாற்றினார். 2004ஆம் ஆண்டு ஐரோப்பிய சம்பியனான கிரீஸ் உலகக்கிண்ண போட்டியில் அடித்த முதல் கோல் இது. இந்த கோலையடுத்து முதல் பாதி ஆட்டம் 1–1 என்ற சமனிலையில் முடிந்தது.

பிற்பாதி ஆட்டத்தில் நைஜீரியா அணிக்கும் பல வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால் அத்தனையும் வீணடிக்கப்பட்டன. அதேவேளையில் கிரீஸ் வீரர்களும் கோல் அடிக்க போராடிக் கொண்டிருந்தார்கள். 71ஆவது நிமிடத்தில் டோராசிடிஸ் ஒரு கோல் அடிக்க கிரீஸ் முன்னிலை பெற்று. கடைசிவரை போராடிய நைஜீரியா வீரர்களால் மேற்கொண்டு கோல் எதுவும் அடிக்க முடியவில்லை.

இறுதியில் கிரீஸ் 2–1 என்ற கோல் கணக்கில் நைஜீரியாவை வீழ்த்தியது. உலக கோப்பை கால்பந்தாட்ட போட்டியில் கிரீஸ் அணி பெற்ற முதல் வெற்றி இதுவாகும்.

நைஜீரிய வீரர் சைனிகயிட்டா செய்த தவறே அந்த அணியின் தோல்விக்கு காரணம். கடந்த உலக கோப்பை போட்டி இறுதி ஆட்டத்தில் பிரான்சின் சினடேன் சிடேன் இத்தாலியின் மார்கோ மாட்டரசியை தலையால் முட்டித் தள்ளினார். இதனால் சிடேன் வெளியேற்றப்பட பிரான்ஸ் அந்த போட்டியில் தோற்று உலக கோப்பையை இழந்தது. அதே போலவே சைனிகயிட்டாவும் எதிர் அணி வீரரை காலால் உதைத்ததால் களத்தை விட்டு வெளியேற்றப்பட்டார். 10 வீரர்களுடன் ஆடிய நைஜீரியாவும் உலக கோப்பையை விட்டு வெளியேறியது.

அடுத்த போட்டியில் கிரீஸ் அணி ஆர்ஜென்டீனாவை சந்திக்கிறது. மற்றொரு ஆட்டத்தில் நைஜீரியா தென்கொரிய அணியை எதிர் கொள்கிறது. ஆர்ஜென்டீனா ஏற்கனவே இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுவிட்டது. கிரீசும் தென்கொரியாவும் தலா 3 புள்ளிகள் பெற்றுள்ளன. எனவே கடைசி ஆட்டத்தில் வெற்றி பெறும் அணியே இரண்டாவது சுற்றுக்கு முன்னேறும். கிரீஸ், ஆர்ஜென்டீனாவை வீழ்த்துவது கடினம். தென்கொரியா சிறப்பாக விளையாடும் பட்சத்தில் நைஜீரியாவை வெற்றி கொள்ள வாய்ப்பு அதிகம்.

# சிக்கலில் பிரான்ஸ் அணி; மெக்சிக்கோ அபார வெற்றி

(போலாக்வானி)

உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடரிலிருந்து வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது முன்னாள் சம்பியன் (1998) பிரான்ஸ் அணி. நேற்றுமுன்தினம் நடந்த லீக் போட்டியில் பிரான்ஸ் அணி 0–2 என்ற கோல் கணக்கில் மெக்சிக்கோ அணியிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்தது.

தென்னாபிரிக்காவில் உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடர் நடக்கிறது. போலாக்வானியில் நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் ஏ பிரிவில் இடம் பெற்ற பிரான்ஸ் மெக்சிக்கோ அணிகள் மோதின.

**பிரான்ஸ் ஏமாற்றம்**

இப் போட்டியின் ஆரம்பம் முதலே இரு அணிகளும் கோல் அடிக்க கடுமையாகப் போராடின. நான்கு முறை (3, 10, 24, 31ஆவது நிமிடம்) கோனர் கிக் வாய்ப்புக்களை கோட்டை விட்டது பிரான்ஸ் அணி. 4ஆவது நிமிடத்தில் முரட்டாட்டம் ஆடிய மெக்சிக்கோ வீரர் பிரான்கோ மஞ்சள் அட்டை பெற்றார். எவ்ரா, ரிபரி, கல்லாஸ் உள்ளிட்ட பிரான்ஸ் அணியின் நட்சத்திர வீரர்கள் எதிர்பார்த்த அளவுக்கு விளையாட வில்லை. முதல் பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்க வில்லை.

**மெக்சிக்கோ மிரட்டல்**

இரண்டாவது பாதியில் மெக்சிக்கோ அணி அபாரமாக ஆடியது. 64ஆவது நிமிடத்தில் மெக்சிகோ வீரர் ஹெர்னாண்டஸ் சிறப்பான கோலடித்தார். இந்த சமயத்தில் பிரான்ஸ் வீரர் ஒருவர் கூட தற்காப்பு பகுதியில் இல்லை. இது பிரான்ஸ் அணியின் படுமோசமான ஆட்டத்தை காட்டியது.

இதனையடுத்து 78ஆவது நிமிடத்தில் மெக்சிகோ வீரர் பெரேராவை பெனால்டி ஏரியாவில் காலால் தட்டினார் பிரான்ஸ் வீரர் அபிடால். இதனால் மெக்சிகோவுக்கு பெனால்டிகிக் வாய்ப்பு கிடைத்தது. இதை கோலாக மாற்றினார் பிளான்கோ. தொடர்ந்து மோசமாக ஆடிய பிரான்ஸ் அணியால் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. இறுதியில் மெக்சிகோ அணி 2–0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

**வாய்ப்பு இல்லை**

இப் போட்டியில் தோல்வி அடைந்த பிரான்ஸ் அணி ரவுண்டப் ஒப் 16 சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை கிட்டத்தட்ட இழந்து விட்டது. இருப்பினும் ஏதாவது அதிசயம் நடந்தால் பிரான்ஸ் அடுத்த சுற்றுக்கு முன்னேறலாம்.

தனது அடுத்த போட்டியில் பிரான்ஸ் அணி, தென்னாபிரிக்க அணியை அதிக கோல்கள் வித்தியாசத்தில் வீழ்த்த வேண்டும். அதே சமயம் மெக்சிகோ உருகுவே அணிகள் மோதும் போட்டியில் ஏதாவது ஒரு அணி வெற்றி பெறவேண்டும். ஒரு வேளை இப் போட்டி சமனிலையானால் பிரான்ஸ் வாய்ப்பு பறி போகும். ஏ பிரிவிலிருந்து மெக்சிகோ, உருகுவே அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறும்.

## அன்பு மாணவர்களே!

உங்கள்வலம்புரியில்நேற்று(18.06.2010) வெளியாகி ஆசிரியர் எஸ்.எஸ்.சிறி தயாரித்து வழங்கிய பொருளியல் மாதிரி வினாத்தாளுக் குரிய விடைகள் இங்கு பிரசுரமாகிறது.

அத்துடன் வினாத்தாளின் ஏற்பட்ட சில அச்சிடல் பிழைகள் சரிசெய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவிக்கின்றோம். (ஆ–ர்)

வினா இல

(01) IV

(02)II

(03) உற்பத்தி சாத்திய வளையியின் மையப் புள்ளிக்கு குழிந்த வடிவத்திற்கு காரணமாக அமைவது.

விடை –III

(04)IV சேமிப்பில் ஏற்படும் அதிகரிப்பு கண்டிப்பாக அதிகரிப்புக்கான வழிகாட்டி.

(05)

| Xபொருள் | Yபொருள் |
|---|---|
| 0 | 10 |
| 1 | 7 |
| 2 | 4 |
| 3 | 2 |
| 4 | 0 |

விடை – V

(06) V

(07) III


(08) V

(09) QS=10p, QD=400-10p எனச் சார்புகளை தரப்பட்டுள்ள 30/= வானது குறைந்த பட்சக் கட்டுப்பாட்டு விலையாகும். இங்கு ஏற்படும் மிகை நிரம்பலை கொள்வனவு செய்வதா / மானியம் வழங்குவதா சிறந்த காரியமாகும் என ஆராய்க.

விடை – IV

மானியம் வழங்கல் / மிகை நிரம்பலை கொள்வனவு செய்தல்.

(10)




விடை – IV

மொத்தப் பயன் வீழ்ச்சியடையும் போது எல்லைப் பயன் பூச்சியமாக அமையும்

(11) விடை – I குறிப்பிட்ட சந்தை ஒவ்வொரு மேலதிக வெளியீட்டை பெறும் போதும் அதனால் மூன்றாம் நபருக்கு கிடைக்கும் நன்மையின் அதிகரிப்பு / மாற்றம்.

(12)

| பண்டம் | வருமான விளைவு | பதிலீட்டு விளைவு |
|---|---|---|
| கிபன் பண்டம் | –12 | 8 |
| சாதாரண பண்டம் | 30 | 20 |
| இழிவுப் பண்டம் | –6 | 12 |

விடை – IV

(13) (II)

(14) (IV)

(15) (I)

(16) (I)

(17) (III)

(18) (V)

(19) (I)

(20) (III)

## தியாகிகள் தின நிகழ்வில் வரதராஜப்பெருமாள் கருத்துரை

(யாழ்ப்பாணம்)

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் உயிர்நீத்த தமது கட்சித் தோழர்கள், ச[illegible]யக்கங்களின் போராளிகள், பொது மக்களை நினைவுகூரும் வகையில் வருடந்தோறும் அனுஷ்டித்து வரும் தியாகிகள் தினம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பலநோக்கு கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வடக்குக்கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

இவருடன் கட்சித் தலைவர்கள் உட்பட இதர தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கேட்டுள்ளது. (ந–3)

## பருத்தித்துறையில் இன்று பொலிஸ் நடமாடும் சேவை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச பொலிஸ் பிரிவினரால் பொது மக்களின் நலன் கருதி நடமாடும் சேவை இன்று காலை 9 மணிக்கு கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலையில் இடம் பெறும்.

இதில் ஆயுர்வேத வைத்திய சேவை, பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகள் இடம் பெறுவதுடன் பொலிஸ் முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பிரதேச இளைஞர்களின் ஒத்துழைப்புடன் இரத்ததானம் மற்றும் மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி இளைஞர்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி ஆகியனவும் நடைபெறவுள்ளன. (ந–3)

## வர்த்தக நிலையங்களை ஞாயிற்றுக்கிழமைகளில் மூடுக

## யாழ். வணிகர் கழகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் அனைத்து வர்த்தக நிலையங்களும் ஞாயிற்றுக் கிழமைகளில் மூடி அங்கு பணி புரியும் ஊழியர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென ஊழியர்கள் சார்பில் கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊழியர்களால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் அறிவிப்புக்கு அமைய யாழ். நகரில் வர்த்தக நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடப்படுகிறது.

எனினும் சில வர்த்தக நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறக்கப்படுவதனால் அங்கு பணிபுரியும் ஊழியர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே யாழ்.நகரிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடி ஊழியர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென ஊழியர்கள் சார்பில் கேட்கப்பட்டுள்ளது. (ந–5)



## பொதுக்கூட்ட அறிவித்தல்





வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்க இடைக்காலப் பொதுக்கூட்டம் நாளை 20.06.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வேம்படி வீதி றிம்மர் மண்டபத்தில் சங்கத் தலைவர் நல்லதுரை குகானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

ஓட்டோ உரிமையாளர்கள், சாரதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ந.குகானந்தராசா
தலைவர்
வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கம்

(1728)

## வன்னிப் பெரு நிலப்பரப்...

வுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மலையகம் மற்றும் தெற்குப் பகுதிகளில் தேயிலை மற்றும் றப்பர் பயிர்ச் செய்கை அமுல்படுத்தப்பட்டு பல இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் அடிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவிருப்பதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது.

முன்னதாக அந்தப் பகுதி மக்கள் பாரிய அளவில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். இதற்கு முன்னர் வட பகுதியில் ஆராய்ச்சியை மேற்கொண்ட இந்திய விவசாய ஆராய்ச்சித் திணைக்களமும் அந்தப் பகுதியில் விவசாய நடவடிக்கைகளைப் பரிந்துரைத்ததாகக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் றப்பர் பயிர்ச் செய்கைக்குப் பழக்கப்படாத மக்கள், எவ்வாறு இந்தத் தொழிலை மேற்கொள்வர் என்ற சந்தேகம் எழுந்துள்ளதுடன் இந்த நடவடிக்கை சிங்கள மக்களை அங்கு குடியேற்றுவதற்கான ஒரு முனைப்பாக இருக்கலாம் என்ற நிலைப்பாட்டையும் தோற்றுவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கைதடிப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று மாலை 6மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ரட்ணசிங்கம் பரதன் (வயது- 22) என்பவரே படுகாய மடைந்துள்ளார்(ந-3,24)

## குற்ற...

லியன் பெஸ்கோ நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

எனினும் இக் குழு நியமிக்கப்படும் என லியன் பெஸ்கோ குறிப்பிட்டார். லியன் பெஸ்கோவின் கருத்து சம்பந்தமாக ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவிடம் வினவிய போது,

இது சம்பந்தமாக தெளிவான பதில் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட குழு போதுமானது எனவும் அவர் தெரிவித்தார். (ந-5)


ப்மிலீ சுப்பர் ஸ்பொட
சந்தை அருகாமை, மானிப்பாய்
T.P. 021 5100169
021 7900388
Baira
கோழி இறைச்சி
01 Kg 350/=
பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு ரூபா 350/= பெறுமதியான பைப் பை இலவசம்.
(சி-435)




## இலங்கைக்கு எதிராக...

கைக்கு எதிரான சர்வதேச நீதி விசாரணைக்கு அவுஸ்திரேலியா, ஐ.நா. சபையில் ஆதரவு வழங்க வேண்டும் என்று அப் பிரேரணையில் கோருவார்.

இவரின் இந் நடவடிக்கைக்கு கிறீன் கட்சிக்கான தமிழர்கள் அரசியல் அமைப்பு பேராதரவு வழங்க முன்வந்துள்ளது. (ந-5)


## CERTIFICATE COURSE IN OFF-SET PRINTING

அச்சகத்தில் தொழில்புரிபவர்களுக்கும் பாடசாலைக் கல்வியை முடித்தவர்களுக்கும் செயன்முறை விளக்கங்களுடன் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் யாழ் நகரில் முதன் முறையாக அச்சகத்தொழில் சம்பந்தமான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி நெறிகளில் சேர விரும்புபவர்கள் விபரங்களை வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை 9.00am to 4.00pm சனிக்கிழமைகளில் 9.00am to 12.30pm)

82/13 செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே:0212221388
என்ற முகவரியில் தொடர்புகொண்டு
பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: ஒரு வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர். (1725)



அழகுக்கு அழகு சேர்க்கும் அசல்
22 கரட் தங்க நகைகளை
நவீன வடிவமைப்புகளில்
பெற்றுக் கொள்ள
பிரம்யா நகைமாடம்
யாழ். வீதி, ஆலடிச்சந்தி,
மானிப்பாய்.
(C-475)




## யப்பானின் விசேட...

என வலியுறுத்தப்பட்டது. சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அகாசி, இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் நன் மதிப்பைப் பெற வேண்டுமானால் இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். அத்தோடு அரசியல் தீர்வொன்றை வழங்க வேண்டும் என்றார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இன்று சந்திக்கும் போது நீங்கள் முன்வைத்த கோரிக்கைகளை அவரிடம் தெரிவிப்பதாக யசூசி அகாசி குறிப்பிட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். இச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், டி.சுமந்திரன், ஈ.சரவணபவன், வினோநோகராதலிங்கம் மற்றும் யோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-5)


## வீடு விற்பனைக்கு

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட அரியாலை சாஸ்திரியார் ஒழுங்கையில் 2 பரப்புக் காணி வீடு , கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
(மாம்பழம் சந்திக்கு அண்மையில்)
தொடர்பு: 077 6230569 (1722)


## 13-வது திருத்தச்...

மேலும் தெரிவித்தவை வருமாறு, இந்திய-இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேல் கடந்து விட்டது. ஆனால் 13-வது திருத்தச் சட்டம் இன்னும் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவேயில்லை. ஒரேயடியாக அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள முடியாது. ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வலுவான மக்கள் ஆணை கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள அரசுக்குச் சிறந்த வாய்ப்பு கிட்டியுள்ளது. ஆகவே அதிகாரப் பகிர்வு தொடர்பான முனைப்புகளை அரசு உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். அரசின் முன்னெடுப்புகளுக்குத் தமிழ் மக்கள் சரியான முறையில் ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்றார். (ந-5)


## Barnabas இன் மலிவு விற்பனை

உடன் விரையுங்கள் உங்கள் தெரிவுக்கு

247, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)

5 வருட உத்தரவாதம்
Life Time
Free Service

247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)
360/1, கத்தோலிக்க அச்சக கட்டிடத் தொகுதி, யாழ்ப்பாணம்.
சுதுமலைச் சந்தி, மானிப்பாய்.

- 29" Sony Flat TV, 21" Flat TV, 14" TV மிக மிக குறைந்த விலையில்
- தற்போது 21" TV 12,490 ரூபாய் மட்டும்...
- உதை பந்தாட்ட உலகக் கிண்ண விளையாட்டைக் கண்டு களிக்க 29" TV மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்யுங்கள்.
- தற்போது எம்மிடம் எலக்றிக் சமையல் பொருட்கள் மிகக் குறைந்த விலையில்
- எங்கும் பெற முடியாத உத்தரவாதமும், விற்பனைக்குப் பிந்திய அதிவேகமான சேவையும் எம்மிடம் மட்டுமே! உடனே அழையுங்கள் 077 7448668.
- மிக மிக இலகுவான கொள்வனவு முறைமைகள் தற்போது நடைமுறையில்.
- எந்த மொத்த வியாபாரிக்கும் வியக்க வைக்கும் விசேட சலுகைகள்...
- சாவகச்சேரி, கிளிநொச்சி போன்ற இடங்களில் மொத்த வியாபாரிகள்தேவை.

(C-474)


## மரண அறிவித்தல்

தோற்றம் 05 03 1948 — மறைவு 18 06 2010



### திருமதி இராஜேஸ்வரி சண்முகரெத்தினம்
(நாரந்தனை-சண்டிலிப்பாய்)

நாரந்தனை தெற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது சண்டிலிப்பாயில் வசித்து வந்தவருமான திருமதி இராஜேஸ்வரி சண்முகரெத்தினம் 18.06.2010 வெள்ளியன்று இறைபதம் அடைந்தார்.

இவர் சண்முகரெத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வீரகத்தி முத்துப்பிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற கதிர்காமர், சிதம்பரம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற விசாலாட்சி சரவணபவன் மற்றும் நாகமுத்து, காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் அருளானந்தசிவம், குமரகுருபரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,

சரவணபவன், சிவபாக்கியம், ஈஸ்வரி, ஜெயமணி, ஜெம்மா, இலட்சுமி, காமாட்சி, புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, செல்வம், பிள்ளைநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

திருமதி மலர்விழி நாகேஸ்வரன், திருமதி மங்கை வென்சன் ஆகியோரின் சிறியதாயாரும், திருமதி யாழினி ஜெயகாந்தன், திருமதி கமலினி இளங்கோ, வாசுகி, செறோன் பெலின்டா, சஞ்சீவன், ஜீவநாத், ஜீவிதன் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 19.06.2010 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
க.சண்முகரெத்தினம் (கணவன்)
வி.நாகமுத்து, வி.குமரன்-ஆசிரியர் (சகோதரர்கள்)

(C-476)

## விழிநீர் சொரியும் 90 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்புடன் கருணை சேர்
ஆருணியத்தில் வாழ்ந்தீர்
ஆனந்தமதாய் நாமும் மகிழ்ந்திருந்தோம்
நீள் பயணம் கொள் இவ் வாழ்வில்
இடை வழியில் பிரிந்தீர் அன்றோ
மின்னும் பொருளனைத்தும்
இவ்வுலகில் பொன்னல்ல என அறியீரோ
நல்லை அழகன் தாள் சேர்ந்து
பெற்றிடுக ஆத்ம சாந்தி

### செல்வி சோபிகா கந்தசாமி

என்றும் உன் நினைவில் துன்பமுறும்:
அன்பு அம்மா, சகோதரிகள்,
அண்ணா-கமலேஸ்வரன்,
தம்பி- பிரகாஷ்,
அத்தான் மகன்- யசிகரன்

தகவல்:
சி.தனபாலன்
அரியாலை மேற்கு

(C-471)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.